விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 12 வியாழக்கிழமை (28.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221




'இலங்கையின் கொலைக்களம்'

# அமெரிக்காவுக்கு விளக்கமளிக்க இலங்கை அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

பிரித்தானிய தொலைக்காட்சியான சனல் 4 ஒளி பரப்பிய வீடியோ தொடர்பில் அமெரிக்க உயரதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூற தவறும் பட்சத்தில் இலங்கைக்கான அமெரிக்காவின் நிதி உதவிகளை தடை செய்வதற்கான தீர்மானம் ஒன்றை அமெரிக்கக் காங்கிரஸ் குழு நிறைவேற்றியுள்ளநிலையில் இம் முடிபினை இலங்கை எடுத்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனுக்கு கட்டாய விடுப்பு

### ஆளுநர் சந்திரசிறி பணிப்பு

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் அரசாங்கத் தரப்பிற்கு ஏற்பட்ட தோல்வியின் எதிரொலியாக வட மாகாண சபை அதிகாரிகள் மீது ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கடும் தொனியில் பாய்ந்துள்ளார்.

இதில் முதல் பழிவாங்கல் நடவடிக்கையாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு கட்டாய விடுப்பு வழங்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 20 சபைகளில் 17-ல் அரசதரப்பு படு தோல்வியைச் சந்தித்தது.

இந்நிலையில் வடக்கு மாகாணசபை செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளை வடக்கு மாகாண ஆளுநர் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கமும் கூட்டமைப்பும் மீண்டும் அடுத்த வாரம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணும் வகையில் இப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றியீட்டியுள்ள நிலையில் இப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு கௌரவமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்பதை இத்தேர்தலின் ஊடாக தமிழ் மக்கள் வெளிப்படுத்தி உள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலை வழக்கு விசாரணைக்கு

(கொழும்பு)

மிருசுவிலில் 8 பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆடைகள் தொடர்பான அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் சாட்சியத்துக்காக இந்த வழக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தது.

புதைகுழியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட இரத்தம் தோய்ந்த ஆடைகள் அந்த படுகொலையில் கொல்லப்பட்ட நபர்கள் அணிந்திருந்தவைதான் என்பதை அரச பகுப்பாய்வுத் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளதாக பிரதி பகுப்பாய்வாளர் டி.எச்.எல். ஜயமான்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கதிரேஸ் ஞானவிமலன், ஞானவிமலன் ரவிச்சந்திரன் ஆகியோரது ஆடைகளே அவை என்பதை அவர்களின் உறவினர்கள் ஒத்துழைப்புடன் உறுதிப்படுத்தியுள்ளதாக பகுப்பாய்வாளர் குறிப்பிட்டார்.

இதனைய (20ஆம் பக்கம் பார்க்க)

## லலித் கொத்தலாவல பிணையில் விடுதலை

(கொழும்பு)

கோல்டன் கீ மோசடி வழக்கின் சந்தேக நபர்களான செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவல உட்பட ஏழு பேருக்கு பிணை வழங்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்தது.

இதன்போது லலித் கொத்தலாவலயை 5 மில்லியன் ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிப்பதாக நீதிபதி அறிவித்தார்.

குறித்த வழக்கின் மற்றொரு சந்தேக நபரும் லலித் கொத்தலாவலயின் மனைவியுமான சிசிலி கொத்தலாவல நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகாததை அடுத்து அவரைக் கைது செய்யுமாறு நீதிபதி தீபாலி விஜயசுந்தர பிடியாணை பிறப் (20ஆம் பக்கம் பார்க்க)

## 'பாதை' நடை பவனி மூலம் ரூ. 140 மில்லியன் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக நிதி சேகரிக்கும் பாதை எனும் நடைபவனி மூலம் 140 மில்லியன் ரூபாய் சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு தேவைப்படும் 200 மில்லியன் ரூபாய் சேகரிக்கும் பொருட்டு கடந்த முதலாம் திகதி இலங்கையின் தெற்கு தெய்வேந்திர முனையிலிருந்து வடக்கே பருத்தித்துறை வெளிச்ச வீட்டினை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடைப் பயணம் நேற்றுடன் முடிபடைந்தது.

கடந்த 27 நாட்களாக நடைபெற்ற மேற்படி நடைபவனி மூலம் 140 மில்லியன் ரூபாய் சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான நிதி சேகரிக்கும் முயற்சியில் இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தி கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரிகளான நாதன் சிவகணநாதன், சரிந்த உனம் புவி ஆகியோர் ஈடுபட்டனர்.

இவர்களது இந்தப் பாதை என்னும் நடைப் பவனிக்கு கலர்ஸ் ஓஃப் கறேஜ் டிரஸ்ட் நடைப் பவனிக்கு அனுசரணை வழங்கியது.

தெய்வேந்திர முனையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகருக்கு அண்மையில் நேற்றிரவு கோஷ்டி மோதல்

### வானை நோக்கிச் சுட்டுக் கட்டுப்படுத்தியது இராணுவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகருக்கு அண்மையில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று இரவு 8.00 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே மோதல் இடம் பெற்றது.

சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்ற இம் மோதலை, சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மோதலைக் கட்டுப்படுத்தினர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

நேற்று இரவு 8.00 மணியளவில் ஆஸ்பத்திரி வீதி முலைவைச் சந்தியில் நின்ற ஒரு குழுவிற்கும், புகையிரத நிலைய வீதியில் நின்ற மற்றொரு குழுவிற்கும் இடையே மோதல் வெடித்தது.

இரு தரப்பின (20ஆம் பக்கம் பார்க்க)

## தி.மு.கவிலிருந்து பா.ம.க விலகல்

(சென்னை)

தி.மு.க கூட்டணியிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி விலகுவதாக அக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் முடிபு எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதிர்வருகின்ற உள்ளாட்சித்தேர்தலில் மாற்று அணி அமைப்பது என்றும் பாட்டாளி மக்கள் கட்சி முடிபு செய்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

## மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்-டிரக்டர் விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று 6.45 மணியளவில் ஆனைக்கோட்டைக் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

முன்னால் பயணித்துக் கொண்டிருந்த காரினை பின்வந்த மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த டிரக்டர் வாகனத்துடன் விபத்துக்குள்ளானது.

டிரக்டருடன் மோதுண்ட மோட்டார் சைக்கிள் சில மீற்றர்தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு வீசப்பட்டமையால் அதில் பயணித்தவர் உரசல் காயங்களிற்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது. (எ-8,46)

FINANCIAL SPONSORSHIP

UK, USA, Canada, Australia

போன்ற நாடுகளில் கல்வி கற்பதற்கு

SPONSORSHIP

பிரச்சினையா?

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

VTL மெனேஜ்மென்ட் சேர்விஸ் (பிரை) லிமிடெட்,

இல.1, டீன்ஸ்டன் ஹவுஸ்,

டீன்ஸ்டன் பிளேஸ், கொழும்பு 3.

072-9994777/011-7902938

## 2,700 அரச ஆசிரியர் நியமனங்களில் 230 பேர் மட்டுமே தமிழர்கள்!

(கொழும்பு)

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 709 ஆசிரியர் நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. இதற்கான அறிவித்தலை கல்வி அமைச்சு விடுத்துள்ளது. எனினும் அவற்றில் 230 நியமனங்கள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சின் அறிவித்தல்படி ஆயிரத்து 662 சிங்களமொழி மூல ஆசிரியர்களும், 230 தமிழ் மொழி மூல ஆசிரியர்களும், 138 அழகியல்பாட ஆசிரியர்களும், 84 தகவல் தொழில்நுட்பபாட ஆசிரியர்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.


இதற்கான நியமனக் கடிதங்கள் விரைவில் சம்மந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

அரசு விரைவில் 4 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் என்று இரு மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

எனினும்அதில்அரைவாசிபேருக்கு மட்டுமே இப்போதுநியமனங்கள்வழங்கப்படுகின்றன. ஏனையோருக்கும்நியமனங்கள்வழங்கப்படுமா?என்று தகவல் எதுவும் வெளியாகவில்லை. (எ)

## தென்பகுதி மக்களின் அன்பை 'பாதை' வெளிக்காட்டுகிறது

### நாமல் எம்.பி. தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள மக்கள் மீது தென்பகுதி மக்கள் வைத்திருக்கும் அன்பை பாதை எனும் நடைப்பவனி என வெளிக்காட்டுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாதை நடைப் பவனியின் இறுதி நாள் கௌரவிப்பு நிகழ்வுகள் நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றொரு மறக்க முடியாத நாள். இலங்கையின் தென்பகுதியான தெய்வேந்திர முனையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதை எனும் நடைபயணம் தற்போது நிறைவடைந்துள்ளது.

இந்த நடைப் பவனி தென்பகுதி மக்கள் வடபகுதி மக்கள் மீதும் அவர்களது பிள்ளைகள் மீதும் வைத்திருக்கும் அன்பை உலகத்திற்கு காட்டுகின்றது. சகோதர சகோதரிகளில் 30 ஆண்டுகளாக பின்தங்கிய வடமாகாணத்திற்கு இப்போது அபிவிருத்தி வந்துவிட்டது.

இது உங்களுக்கும் எங்களுக்கும் சந்தேசத்தை தரக்கூடிய செய்தி. இன்று (நேற்று) ஆரம்பிக்கும் புற்றுநோய் வைத்தியசாலை உங்களது பிள்ளைகளுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

பாதையாத்திரையை ஒழுங்கு செய்து முன்னின்று செயற்பட்ட நாதன் சிவகணநாதன், சரிந்த உனம் புவ மற்றும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தனாவுக்கும் வடமாகாண மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

## கிழக்கில் வெற்றி பெற்றவர்கள் சம்பந்தனின் இல்லத்தில் சந்திப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைப்பட்டினமும் சூழலும் பிரதேச சபை, குச்சவெளி பிரதேச சபை, சேருவில பிரதேச சபை ஆகியவற்றுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களில் வெற்றியீட்டிய கூட்டமைப்பின்உறுப்பினர்கள், போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் பங்குபற்றும் கூட்டம் நேற்று பிற்பகல் தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் வெற்றியீட்டினர். பிரதேச சபையின் நிர்வாகமும் தமிழரசுக் கட்சிவசம் வந்தது.

குச்சவெளி பிரதேச சபையில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் இருவர் வெற்றிபெற்றுள்ளனர். சேருவில பிரதேச சபைக்கு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவானார். (எ)

## 2009ஆம் ஆண்டுக்கு முன்பே யுத்தத்தை நிறைவு செய்திருக்கலாம்!

### அழுத்தங்களால் முடியவில்லை என்கிறார் ஜகத்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டுக்கு முன்னரே யுத்தத்தை நிறைவுசெய்திருக்க முடியும். எனினும் வெளியக மற்றும் உள்ளக அழுத்தங்கள் காரணமாக 2009 ஆம் ஆண்டுவரை அந்த இலக்கை அடையமுடியவில்லை என ஜேர்மனிக்கான இலங்கை தூதுவர் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 57 ஆவது படைப்பிரிவின் முன்னாள் தளபதியான மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், பாரிஸ் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு கடந்த 22ஆம் திகதி விஜயம் செய்தபோது, அங்கு நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலே இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் உறுதியான தலைமைத்துவத்தினாலும் அர்ப்பணிப்பினாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான மிக நீண்ட யுத்தமாக அறியப்பட்ட யுத்தத்தை நாடு வெற்றி கொள்ள முடிந்ததாக அவர் கூறினார். (எ)

## சொகுசுகளுக்கேற்ப நிறம் மாறும் பஸ்களின் பெயர்ப் பலகைகள்

(கொழும்பு)

நீண்டதூர சேவைகளில் ஈடுபடும் பஸ்களின் பெயர்ப் பலகைகள் இனி மேல் பல்வேறு வித வர்ணங்களில் காணப்பட்டால்அவைவெறும்அழகுக்காக என்று நினைத்துவிடாதீர்கள்.

பஸ்களின் சொகுசுத் தன்மையை அந்நிறங்கள் வெளிப்படுத்தக் கூடும்.

மாகாணங்களுக்கிடையிலான நீண்டதூர தனியார் பஸ்களில், அவற்றின் சொகுசுத் தன்மைக்கேற்ப வித்தியாசமான வர்ணங்களில் பெயர் பலகைப் பொருத்தும்திட்டத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நேற்று புதன்கிழமை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, சாதாரண சேவை பஸ்களின் பெயர் பலகை மஞ்சள் நிறத்திலும் அரை சொகுசு சேவை பஸ்களின் பெயர் பலகை நீல நிறத்திலும் இருக்கும்.

அதேபோல், சொகுசு சேவை பஸ்களின் பெயர்ப் பலகை பச்சை நிறத்திலும் அதிசொகுசு சேவை பஸ்களின் பெயர்ப் பலகை ஊதா நிறத்திலும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தூரப் பயணங்களை பயணிகள் சாதாரண கட்டணம் அறவிடும் பஸ் எது, சொகுசு பஸ் எது என அறிந்து கொள்வதற்கு பெரிதும் சிரமப்படுவதாகவும் அத்தகைய சிரமங்களை தவிர்த்துக்கொள்ள உதவும் வகையில் மாகாணங்களுக்கிடையிலான நீண்டதூர சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் இம்மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்தார். (எ)

துயர் பகிர்கின்றோம்

கதிர்காமு கிருஷ்ணபிள்ளை



பள்ளிக் குழந்தைகளுக்கு
அள்ளிச் சொரியும் அறிவின் ஆதாரத்தை
தந்தவரே தந்தையே
இந்த மாநிலத்தை விட்டேகும் காலம்
நேர்ந்ததென போயினீரோ
நீர்வடியக் கண்கள் இடை?
உங்கள் பிள்ளைகளின் உற்றதுணை அதனில்
துயரேற்று அழுகின்றோம்

தந்தையாரின் மறைவினால் துயருறும் எமது பாடசாலை ஆசிரியர் திரு.கி.நவநீதன் அவரினதும் அவர் குடும்பத்தினரதும் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்

மாங்குளம் மகா வித்தியாலயம்

(சி-3860)

உலகப் புகழ்பெற்ற

ஸ்ரீ ரவிராஜ் நசேறி அவர்களின்

தெய்வீக இசை விருந்து

இடம் : பகவான் சத்திய சாயி சேவா நிலையம்
சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

காலம் : 29.07.2011 வெள்ளிக்கிழமை
மாலை 4.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(5556)



சிவபார்வதி ஜோதிட நிலையம்

பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

சண்ஜெய உணவகம் (மேல்மாடி)

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)

நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை

கட்டணம் ரூபா 101/-

(5565)

## இன்று ஒரு தகவல்

# யமன் கேட்ட கேள்வி

இயற்கையில் நடைமுறை உயிர்களின் விருப்பத்திற்கெல்லாம் வளைந்து கொடுக்காது என்பதை விளக்கும் ஒரு கதை இது:

ஒரு சமயம் யமதர்மன் இந்தப் பூலோகத்திற்கு வந்தார்.

ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்த வீட்டில் அவர் நுழைந்தார்.

யாரைத் தேடிக்கொண்டு அவர் அங்கு வந்தாரோ தெரியவில்லை!

அந்தக் கல்யாண வீட்டு வாசலில் ஒரு கதவு ஓரமாக ஓர் எலி நின்று கொண்டிருந்தது.

அந்த எலியைப் பார்த்து யமன், "நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அப்படி கேட்டுவிட்டு அவர் தன் போக்கில் கல்யாண வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

எலி யோசித்துப் பார்த்து, "யமன் என்னைப் பார்த்து 'நீ இங்கேயா இருக்கிறாய்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டுவிட்டுப் போகிறாரே! அப்படியானால் நான் இந்நேரம் யமலோகத்தில் இருக்க வேண்டிய ஆளா?" என்று நினைத்தது.

அந்த எண்ணம் காரணமாக எலிக்கு மரணபயம் வந்துவிட்டது. உடனே அது அழ ஆரம்பித்தது.

வெளியே வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் ஒரு பருந்து அங்கே பறந்து வந்தது.

எலியைப் பார்த்த பருந்து அதன் அருகில் சென்று "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது.

பருந்திடம் எலி, "யமன் இப்படி என்னைக் கேட்டுவிட்டுப் போனார்!" என்று விடயத்தைச் சொல்லி அழுதது.

அதைக்கேட்ட பருந்து சிரித்துக்கொண்டே, "கவலைப்படாதே! உனக்கு ஏதாவது கெடுதல் வரவேண்டுமானால் அது என்னால்தான் வரவேண்டும். நான் உனக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டேன்! என்று நான் உனக்கு இப்போதே வாக்குறுதி தருகிறேன். தைரியமாக இரு!" என்று கூறியது.

"இருந்தாலும் யமன் திரும்பி வரும்போது என்னைத் தூக்கிக்கொண்டு போய்விட்டால் நான் என்ன செய்வது?" என்று எலி கேட்டது.

"அதற்கும் ஒரு வழி இருக்கிறது! நீ உடனே என்னுடன் புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமாக ஓரிடத்தில் வைத்து விடுகிறேன்!" என்று பருந்து கூறியது.

"சரி!" என்று கூறி எலி பருந்துடன் புறப்பட்டது.

பருந்து எலியைத் தூக்கிச் சென்று ஒரு மலையுச்சியில், ஒரு பாறையின் பின்புறம் இருந்த ஒரு பொந்தில் எலியைப் பத்திரமாக விட்டது. பின்னர் பருந்து திரும்பவும் அந்தக் கல்யாண வீட்டிற்கே வந்து சேர்ந்தது.

அந்தச் சமயத்தில் யமன் வெளியே வந்துகொண்டிருந்தார். அவர் கதவு ஓரமாக அந்த எலியைத் தேடினார். எலி அங்கில்லை!

அப்போது அந்தப் பருந்து சிரித்துக் கொண்டே யமனிடம் சென்று, "நான்தான் எலியைப் பத்திரமாக எடுத்துச் சென்று மலையுச்சியின் பாறை மறைவில் வைத்திருக்கிறேன்!" என்று விடயத்தைக் கூறியது.

அதைக் கேட்டதும் யமன் 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டார்.

பின்னர் கூறினார்: "அதுதானே பார்த்தேன்... இன்றைக்கு இந்த நேரத்தில் அந்த எலிக்கு மலையுச்சியில் பாறை மறைவில் இருக்கும் ஒரு பூனையால் மரணம் ஏற்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படியிருக்கும்போது அந்த எலி இங்கே நின்று கொண்டிருக்கிறதே என்று பார்த்தேன். அதனால்தான் 'நீ இங்கேயா இருக்கிறாய்?' என்று எலியிடம் கேட்டேன். இந் நேரம் அங்கே கதை முடிந்திருக்கும்!" என்றார்.

இந்தக் கதையிலிருந்து 'இயற்கையின் கணக்கு எப்போதும் சரியாகவே முடியும்' என்று தெரிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வவுனியாவில் பாரிய முதலீட்டுடன் நன்னீர் குடிநீர் திட்டம் அமுல்

வவுனியா நகருக்கான நன்னீர் குடிநீர் திட்டம் பாரிய முதலீட்டுடன் அமுலாக்கப்படும் அதேநேரத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய நட்டஈடுகளும் காணிகளும் வழங்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ் உறுதியளித்துள்ளார்.

பறங்கியாறு வழிமறிக்கப்பட்டு அதன்மூலம் தேக்கப்படும் நீர் குழாய் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட பின்னர் மக்களுக்கு விநியோகம் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பறங்கியாறை அணைபோட்டு மறிப்பதன் மூலம் ஈச்சங்குளம், சாஸ்திரிகூழாங்குளம் , புதுக்குளம், வேப்பம்குளம், கட்டையர்குளம் உள்ளடங்கிய ஐந்து கிராமங்களின் ஒவ்வொரு பகுதி நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் 600 ஏக்கர் நெற் செய்கை நிலமும் 40 ஏக்கர் மேட்டுநில காணியும் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்த நிலப்பரப்பு செய்கை பண்ணப்படாத காலத்தில் கால் நடைகளுடைய மேய்ச்சல் தரையாகவும் உள்ளது என இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பாதிக்கப்படும் மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்க அதிகாரிகள் முன்வந்துள்ள போதிலும் இந்த குடிநீர் திட்டத்திற்கு பாரிய எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளது. வவுனியாவில் தற்போது உள்ள குடிநீர் சேவை தரமற்றதாகவே காணப்படுகின்றது. வரட்சிக்காலத்தில் குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாதாக நிலை உள்ளது.

புதிய திட்டத்தின் பிரகாரம் வருடம் முழுவதும் நீரைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியங்கள் உள்ளது. எனவே பறங்கியாறு மூலம் பெறப்படும் குடிநீர் திட்டத்திற்கு நகர மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளபோதிலும் சிலருடைய எதிர்ப்பினால் திட்ட நடைமுறைகளில் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றது.

நீண்ட காலப்போக்கில் வரையப்பட்ட இந்த திட்டத்திற்கு பாரிய முதலீடு செய்யப்படவுள்ளது. நகரசபை எல்லைக்கு வெளியேயும் இந்த திட்டம் விஸ்தரிக்க முடியும் என திட்ட அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதற்கென திட்ட அலுவலகம் ஒன்று வவுனியாவில் ஸ்தாபிக்கப்பட்டு இதன் ஊடான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குடியிருப்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் வவுனியாவில் இந்த பாரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (ஸ்ரீ-4)

# பரீட்சை மண்டபம் இடம்மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியின் 2011/12 புதிய கல்வியாண்டிற்காக ஆசிரிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த இப்பரீட்சையானது இடவசதி கருதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது எனவும் இத்தகவலை இக்கற்கைநெறிக்கு விண்ணப்பத்த அனைத்து ஆசிரிய மாணவர்களும் கவனத்திற் கொண்டு தவறாது பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 30 | 20 | 20 |
| உருளைக்கிழங்கு | 85 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 |
| தக்காளி | 25 | 35 | 35 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 50 | 70 | 60 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 30 | 20 | 20 |
| வாழைக்காய் | 30 | 25 | 25 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 65 | 65 |
| பாகற்காய் | 60 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 120 |
| பயற்றங்காய் | 50 | 30 | 80 |
| லீக்ஸ் | 50 | 40 | 40 |
| பீற்றூட் | 20 | 25 | 25 |
| கறிமிளகாய் | 50 | 30 | 60 |
| முருங்கைக்காய் | 60 | 80 | 90 |
| போஞ்சி | -- | 110 | 120 |
| கத்தரிதம்புள்ள | 15 | 15 | 15 |
| கீரை - 1 பிடி | 08 | 15 | 15 |
| தேசிக்காய் | 30-40 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

## இராசி பலன்

*28.07.2011*
*(ஆடி12, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*திரயோதசி பின்னிரவு 2.31 மணிவரை*
*மிருகசீரிடம் காலை7.26 மணிவரை*
*இராகுகாலம் 1.32-3.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், உடன் பிறப்புக்கள் தொடர்பில் உதவிகள் கிடைக்கும்.

**இடபம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சியான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், பொது வாழ்வில் புகழ் கூடும்.

**மிதுனம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், காணாமல் போன பொருளொன்று இன்று கைக்கு கிடைக்கலாம், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றங்கள் காண வேண்டிய நாள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், நண்பர்கள் சந்திப்பால் சிறு விரயங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், வெளிநாட்டுத் தொடர்புகள் உருவாகும், பெரிய மனிதரின் தொடர்பால் விருப்பங்கள் நிறைவேறலாம்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, செய்தொழிலில் விருத்தியேற்படும்.

**துலாம்** தடைகள் விலகி தனலாபம் பெருகும் நாள், தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், தேவையற்ற மனச் சஞ்சலங்கள் தோன்றி மறையலாம், உடல் நலனில் கூடிய கவனமெடுக்க வேண்டிய நாள்.

**தனுசு** தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, களஸ்திர சுகமுண்டு.

**மகரம்** உற்றார், உறவினர்கள் உதவி செய்ய முன்வருவர், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், உடல் நலம் ஆரோக்கியமாக இருக்கும்.

**கும்பம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் ஏற்படலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், வாகன சுகமுண்டு, பொருட் சேர்க்கையுண்டு, தொழிலில் ஆர்வத்துடன் பணி புரிவீர்கள், போசன சுகமுண்டு.

வளவன்

# நிலுவைச்சம்பளத்தை வழங்கக் கோரி மின்சாரசபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்




கடந்த பத்து மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலுவைச் சம்பளத்தினை வழங்குமாறு கோரி இலங்கை மின்சாரசபையின் யாழ்ப்பாண ஊழியர்கள் நேற்று யாழ். மனோகராத் திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்டம் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை இடம் பெற்றது.

இதன்போது அவர்கள்பலகோரிக்கைகளை முன்வைத்தனர். அதாவது,

மூன்று வருடங்களுக்கொருமுறை அதிகரிக்கப்படும் தமது சம்பள அதிகரிப்பினை 2009 ஆம் ஆண்டின் ஜனவரி மாதச் சம்பளத்தோடு தருவதாக கூறிய நிர்வாகத்தினர் அதனை வழங்கவில்லை எனக்கூறினார்.

அத்துடன் ஆர்ப்பாட்டம், சுகவீன விடுமுறை, வேலைநிறுத்தம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், விசேட கூட்டங்கள் போன்றவற்றினை தாம் கடந்த 10 மாதங்களாக முன்னெடுத்து வருவதாக குறிப்பிட் டனர்.

அதன் பிரதிபலனாக ஓகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி தரமுடியாது என ஜனாதிபதியவர்களினால் குறிப்பிடப்பட்ட சம்பள அதிகரிப்பு 2009 ஆம்ஆண்டு நவம்பர் முதல் தரவேண்டிய நிலைமை உரு வாகியது எனவும் அதுவும் 22 வீதத்தினை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் 2006 ஆம் ஆண்டில் 33.33 வீதத்திற்கு குறைவாக தரப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அது மாத்திரமல்லாது 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான அதிகரித்த சம்பளத்தினை அரசாங்கம் வழங்கவில்லை எனவும் இதனால் இலங்கை மின்சாரசபைக்கு உதிரம் சிந்த உழைத்த ஊழியர்கள் குறைந்த சம்பளத்துடன் 2009 ஜனவரி மற்றும் ஒக்டோபர் 01 காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்றுச் சென்றதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (ஸ்ரீ-3-6)




# வசாவிளான் புனித யாகப்பர் ஆலய திருவிழாவில் பெருமளவானோர் பங்கேற்பு

(கொழும்புத்துறை)

யாழ்.வசாவிளான் புனித யாகப்பர் ஆலயத்திருவிழா கடந்த 25 ஆம் திகதி திங்கட் கிழமை புனித சவேரியர் குருத்துவக் கல்லூரி அதிபர் மைக்கல் சவுந்தரநாயகம், அருட் தந்தை அன்ரனி பாலா ஆகியோரின் கூட்டுத் திருவிழாதிருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கடந்த 28 வருடங்களாக மேற்படி பிரதேசத்தில் யுத்தம் இடம்பெற்றதன் காரணமாக அப்பகுதி மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை.

இருந்த போதிலும் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் வேண்டுகோளுக்கிணங்க வருடாவருடம் வசாவிளான் யாகப்பர் ஆலயத் திருவிழா நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நடைபெற்ற இத்திருவிழாவுக்கு யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களிலிருந்து பெருமளவான மக்கள் வருகை தந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-51)

# வீதி புனரமைப்பிற்கென பறிக்கப்பட்ட கற்குவியலால் போக்குவரத்துக்கு சிரமம்

(நவாலி)

நவாலி சின்னப்பா வீதி புனரமைப்புக் கென பறிக்கப்பட்ட கற்கள் பரவப்படாத நிலையில் காணப்படுவதால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மோட்டார் சைக்கிள்,சைக்கிள், தவிர்ந்த ஏனைய வாகனங்களில் பயணிப் போர் பெரும் இடையூறுகளை எதிர்கொள் கின்றனர்.

இதனை கவனத்தில் எடுத்த குறித்த ஒப்பந்தக்காரர்கள் இவ்வீதியினை சீர்செய்யுமாறு இப்பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின் றனர். (ஸ்ரீ-26)


# நிர்வாகசபை தெரிவு


(தனங்கிளப்பு)

மறவன்புலோ கற்பகதரு அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகசபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் சங்கத்தின் தலைவராக அ.தவராசா, செயலாளராக கருணாதேவி, பொருளாளராக செ.ஆனந்தரஞ்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-37)

# வடமாகாண மெய்வன்மைப் போட்டியில் மூன்று பதக்கங்கள் பெற்றுச் சாதனை


வே.குகன்


தி.கோபிராஜ்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவர்கள் மூன்று பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதில் வேலுப்பிள்ளை குகன் என்ற மாணவன் 19 வயதுப்பிரிவில் 1500 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கத்தையும் 800 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் திருவாதவூரர் கோபிராஜ் என்ற மாணவன் இதே பிரிவில் முப்பாய்ச்சலில் வெண்கலப்பதக்கத்தை பெற் றுள்ளார்.

இப்போட்டிகள் அண்மையில் வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரியில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# இரசாயனவியல் வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய நாட்டின் அனுசரணையுடன் இலங்கை இரசாயீனவியல் நிறுவனம் நடத்தும் அவுஸ்திரேலியா இரசாயனவியல் வினாவிடைப் போட்டி யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கு பதிவு செய்யப்பட்ட மாணவர்களையும் மாணவர்களை வழிநடத்த வரும் பாடசாலை ஆசிரியர்களையும் நேரம் தவறாது காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியற்றுறை மண்டபத்திற்கு முன்பாக சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ஸ்ரீ)

# சங்கிலியன்சிலை திறப்புவிழா 3 ஆம் திகதியே இடம்பெறும்

## யாழ்.மாநகரசபை முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.முத்திரைச்சந்தியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சங்கிலியன் சிலை திறப்பு விழா எதிர்வரும் 3 ஆம் திகதியே நடைபெறுமென யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இச்சிலைத்திறப்புவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அன்றையதினம் நல்லூர் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம் இடம்பெறவுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்ற காரணத்தினாலேயே திகதி மாற்றப் பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ


# மது அருந்திவிட்டு இடையூறு விளைவித்த நபருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மது அருந்திவிட்டு பொதுமக்களுக்கு இடையூறுவிளைவித்த குற்றச்சாட்டின் பெயரில் மூன்று நபர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மூவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3)






யா/கோப்பாய் கிறஸ்தவ கல்லூரியில் கணித, விஞ்ஞானக் கல்விக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவரும் வலிகாமம் வலய விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளருமான சி.விஜேந்திர சர்மா நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், பௌதிகவியல் கண்காட்சி பகுதி ஒன்றினையும் படங்களில் காணலாம்.

# இவ்வருடம் 40 இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

இந்த வருடத்தில் 40 இலட்சம் தென்னங் கன்றுகளை நடுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெங்கு அபி விருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் 9 இலட்சம் தென்னங் கன்றுகள் தற்போது நடப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனிடையே எதிர்வரும் போகங்களில் நடுவதற்காக மேலும் தென்னம் நாற்றுக்கள் தற்போது தயார்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் அநுரசிரிவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் தென்னங் கன்றுகளை நாட்டும் நடவடிக்கைகளை ஆரம் பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2016 ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியாக 32 மில்லியன் தென்னங்கன்று களை நாட்டுவதே அமைச்சின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் வருடாந்த தெங்கு உற்பத்தி 2 ஆயிரத்து 700 மில்லியன் என தகவல் வெளியிடப்பட் டுள்ளது.

அது 2016 ஆம் ஆண்டளவில் 3 ஆயி ரத்து650 மில்லியன் வரை உயர்த்தப்படும் என செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

தெங்கு தொடர்பில் ஏற்படும் எந்தவொரு நெருக்கடிகள் குறித்தும் அமைச்சிற்கோ தெங்குற்பத்தி சபைக்கோ அறிவிக்குமாறு தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு கோரிக்கை விடுத் துள்ளது.

இதேவேளை புதுநிலை மழைக்காடு களை நாசப்படுத்தும் உலக நாடுகள் பட்டிய லில் இலங்கை 4 ஆவது இடத்தில் உள்ள தாக இலங்கை தாவரவியல் அமைப்பு தெரி வித்துள்ளது.

அந்த அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகா மையாளர் பந்துரங்க காரியவசம் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ் வில் வைத்து தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் 2011 ஆம் ஆண்டு வனாந்தர வருடமாக பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. இருந்தபோதும் அந்த அமு லாக்கல் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# கொழும்பு-ஓமந்தை இடையிலான புகையிரத நேரத்தில் மாற்றம்

கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் இரவு நேர தபால் புகையிரதம் முதலாம் திகதியிலிருந்து இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு வவுனியாவிற்கு அதிகாலை 5 மணிக்கு வருமெனவும் ஓமந்தையை 5.30 மணிக்குச் சென்றடையும் எனவும் புகையிரத திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த புகையிரதம் தற்போது தினமும் இரவு 8.30 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு அதிகாலை 3 மணிக்கு வவுனி யாவை வந்தடைகின்றது. இதனால் தூர இடங் களுக்குச் செல்லும் பயணிகளுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. அத்துடன் இந்த நேர அட்டவணை பயணிகளுக்கு சாதக மாக இல்லாததனால் இரவு பயணிக்கும் பயணிகளுடைய எண்ணிக்கை குறைவா கவே காணப்பட்டதால் புகையிரத திணைக்களத் திற்கு பலத்த நட்டம் ஏற்பட்டு வந்தது. இதனை கவனத்திற் கொண்டு இரவு 10.30 மணிக்கு கோட்டையிலிருந்து வவுனியாவிற்கான இரவு தபால் புகையிரம் புறப்படும் என அறிவிக்கப் படுகின்றது. (ஸ்ரீ-4)

# ஈரான் வெளிவிவகார பிரதியமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஈரான் வெளிவிவகார பிரதியமைச்சர் செய்த் அமீர் மன்சூர் பேர்சூர் இன்று கொழும்பு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள ஈரான் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

இவர் கொழும்பில் தங்கியீருக்கும் காலப் பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் முஸ்லிம் அமைச்சர்களை யும் சந்திக்கவுள்ளார் என கொழும்பிலுள்ள ஈரான் தூதுவராலய பேச்சாளர் ஒருவர் தெரி வித்தார்.

இதேவேளை ஈரான் நாட்டின் நிதியுதவி யுடன் காத்தான்குடியில் கட்டப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்தையும் இவர் திறந்து வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கிணங்க 179 மில்லியன் ரூபாய் நிதியுதவியை ஈரான் அரசாங்கம் இந்த வீட்டுத் திட்டத்திற்கு வழங்கியுள்ளது.

எழுபது வீடுகள், ஒரு பள்ளிவாசல், சுகா தார நிலையம் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதானம் என்பவற்றைக் கொண்டுள்ள இந்த வீட்டுத் திட்டம் சுனாமியால் பாதிக்கப் பட்ட 50 முஸ்லிம் குடும்பங்களுக்கும் 20 தமிழ் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது . (ஸ்ரீ-4)

# விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட் டப்படிப்புக்கள் பீடத்தினால் நடத்தப்படும் முது கலைமாணி தமிழ், முதுகலைமாணி சைவ சித்தாந்தம் மற்றும் கல்வியியல் முதுமாணி ஆகிய கற்கை நெறிகளுக்குரிய விரிவுரை கள் ஆரம்பமாகவுள்ளன.

இவ் விரிவுரைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறும். இக் கற்கைநெறிகளைதொடரும் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக் குமாறு உயர்பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கேட்டுக் கொள் கின்றார். (ஸ்ரீ-2)

# புதையல் தோண்ட பயன்படுத்திய உபகரணங்கள் மீட்பு

(கொழும்பு)

செட்டிகுளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாவற்குளம் காட்டுப்புறத்தில் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய உபகர ணங்களை பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த இடத்தில் புதையல் தோண்டு வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரை ந்த பொலிஸார் அலவாங்கு, பீங்கான், மண் வெட்டி, குடிநீர் போத்தல்கள் மற்றும் உணவுப் பொதிகள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தப்பிச் சென்றுள்ள அதேவேளை அவர்க ளைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஸ்ரீ-4)


## வடமாகாணசபை நிபுணத்துவ சட்ட ஆலோசகரும் இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதியுமான இ.த.விக்னராசா அவர்களின் வசீகரமான வாழ்க்கைத்துணைவி



எனது 40 வருடகாலப் பல்கலைக்கழகக் கற்பித்தல் அனுபவத்தில் மறக்க முடியாத மாணவர்கள் சிலருளர். அவர்களுள் நிச்சயம் சாந்தியும் ஒருவர்! அவரிடத்துத் தேடல் உணர்வு நிரம்ப இருந்தது. இப்படியான புலமைப் பரப்பு அகற்சி கொண்ட மாணவியர் ஒருவர் தனது குடும்பநிலை வாழ்க்கையில் தமிழ்ப் பண்பாட்டின் பாரம்பரிய நிலையில் சிறிதும் தவறாது வாழ விரும்பி யமையும் வாழ்ந்தமையும் அவரது அறிவின் பிழிவு என்பதிலும் பார்க்க ஆளுமையின் இயல்பே என்று கூறுவேன். செல்வி.சாந்தி இராசதுரை, திருமதி.சாந்தி விக்கினராஜா ஆக மாற்றுப் பெற்ற வளர்ச்சியினூடே அவரது பண்பாட்டு முதிர்வும் அறிவு நிலைக்கடப்பாடுகளும் யாவற்றிற்கும் மேலாக கணவனை மையப்படுத்தி வாழ்க்கையை நடத்தும் பாங்கும் பிள்ளை களை தன் இரத்தத்தின் இரத்தமாக பார்க்கும் பெருமை உணர்வும் மிகச் சிறந்தவையாகும்.

சாந்தி போன்றவர்கள் தங்கள் வாழ்க்கையினூடே "வாழ்வினை" க் கண்டவர்கள். தமிழில் வாழ்க்கை என்ற சொல்லுக்கும் வாழ்வு என்ற சொல்லுக்குமிடையே பெருத்த வேறுபாடுண்டு. வாழும் முறையில் நடத்தப்பெறும் வாழ்க்கையையே நாம் வாழ்வு என்கின்றோம். சாந்தி "வாழ்வுடன்" வாழ்ந்தவர்!

சாந்தி போன்றவர்களின் நினைவுகள் தான் இருக்கின்றவர்களது வாழ்வுகளுக்கான நியாயப்பாடு ஆகிறது.

- பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

திருமதி.சாந்தகுமாரி விக்னராசா
(யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர்)
அவர்களின்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

(18.02.1954 - 28.07.2009)

ஐம்பத்தைந்து ஆண்டுகள் மனித நேயத்துடன் மாதரசியாக வாழ்ந்த எழிலரசி சாந்தியின் உடல் தோற்றம் நிஜத்தில் இல்லாது போனாலும் இறைவனின் மகளாய் வந்தெமது இதயத்தில் இமயமாக வீற்றிருந்து ஒலிக்கும் நாதமாய் இடர்பாடுகளின் போது இன்ப வழிகாட்டியாய் எமது இதயம் இயங்கும் வரை இரட்சிப்பார்.

மூளாய்,
சுழிபுரம்.

சாந்தியின் வாழ்வுடன் வாழும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5562)

# வெளிவாரி பரீட்சை முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வணிகமானி பகுதி-2 2008 மற்றும் வணிகமாணி பகுதி-3, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிவுகள் நேற்று புதன்கிழமை வெளியாகியுள்ளன.

எனவே மாணவர்கள் இன்று வியாழக்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தமது பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம்.

அத்தோடு மீள் பரீட்சார்த்திகள் அன்றைய தினமே பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணிகள் நவம்பர் மாத நடுப்பகுதியில் முடிவுறும்

## இந்திய தூதுவர் அசோக் கே காந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தின் பின்பு இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றத்தை கண்டு வருகின்றது என இந்திய தூதுவர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு நேற்று முன்தினம் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

இந்தியா இலங்கைக்கு இதுவரை பல்வேறு உதவிகளை செய்துள்ளது.இன்னும் பல உதவிகளை செய்ய திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் தென்பகுதி அபிவிருத்திகளுக்கு எவ்வாறு உதவி வழங்குகின்றதோ அதேபோன்றே வடபகுதிக்கும் உதவிகள் வழங்குகின்றது.

காங்கேசன்துறை துறைமுக புனரமைப்பு பணிஆரம்பிக்கப்படுவதன் மூலம் இலங்கையின் சமாதானம் வலுப்பெறுகின்றது.

இலங்கை இந்தியா நட்புறவின் வெளிப்பாடாக இந்த புரனமைப்பு பணி அமைகின்றது.

புனரமைப்பு பணிக்கான ஒப்பந்தம் கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்றது. ஒப் பந்தத்தில் கைச்சாத்திட்டு ஐந்து நாட்களில் புனரமைப்பு பணிஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


இத்துரிதமான செயற் பாடு சந்தோசத்தை ஏற்படுத்துகின்றது.

வடக்கையும் தெற்கையும்அபிவிருத்தி செய்வதில் இந்த துறைமுகத்தின் பயன்பாடு அதிகமாகவே உள்ளது.

இலங்கையின் முழுப்பொருளாதாரத்தில் காங்கேசன்துறை துறைமுகம் முக்கிய இடம் வகிக்கிறது.

துறைமுகம் அமைப்பதற்கான கடலுக்குள் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்தும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வருடம் நவம்பர் மாத நடுப்பகுதிக்குள் இந்த புனரமைப்புப்பணிகள் முடிவுறும்.

எனவே இந்திய அரசின் நிதியுதவியுடன் ரெசோல்ப் மரின் குறூப் நிறுவனத்தினரினால் மேற்கொள்ளப்படும் இந்த புனரமைப்பு இந்திய இலங்கை நட்புறவை மேலும் வலுப்பெற செய்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6-4)



# கனடாவில் இருந்து தமிழர் ஒருவர் நாடு கடத்தப்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

எம்.வீ.சன். சீ கப்பலின் மூலம் கனடா சென்ற இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் நாடு கடத்தப்படக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் குறித்த இலங்கைப் பிரஜை நாடு கடத்தப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை பேணியதாக ஒப்புக் கொண்டுள்ளார். சந்தேக நபர் நேரடியாக யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை எனவும் ஏனையவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு துணை புரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரிடம் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

சன் சீ கப்பலில் பயணம் செய்த அநேக மானவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் உள்ளிட்ட எட்டு பேர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசா ரணை செய்யப்பட்டு வருகின்றனர். பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் ஆறு பேர் இதுவரையில் நாடு கடத்தப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# கொழும்புக்கும்-தூத்துக்குடிக்குமிடையில் மேலுமொரு கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்பு- தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவையில் விரைவில் மற்றொரு கப்பலை ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த பயணிகள் கப்பல் சேவையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு மேலும் ஒரு கப்பலை சேவையில் ஈடுபடுத்த உள்ளதாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்போது ஒரு கப்பலே பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படிருப்பதால் வாரத்திற்கு இரு தடவைகள் இச்சேவை இடம்பெறுகின்றது.

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஜூன் மாதம் முற்பகுதியில் ஆரம்பிக்கபட்டது. இச் சேவையை ஆரம்பித்த நாட்களிலேயே சொற்ப தொகையினரே பயணத்தில் ஈடுபட்டனர். ஆனால் இச்சேவையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது.

இது எதிர்வரும் ஓகஸ்ட் மாத விடுமுறை காலத்தில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அதனால் இந்த சேவையில் மற்றொரு கப்பலையும் ஈடுபடுத்துவதற்கு உத்தேசித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

# தொகுதி அமைப்பாளர்களின் நியமனம் தொடர்பில் புதிய அணுகுமுறை

## ஐ.தே.க. நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும் போது புதிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளதாக கட்சித்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

தற்போது லண்டனில் இடம்பெற்று வரும் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்க அமர்விற்காகச் சென்றுள்ள எதிர்க் கட்சித் தலைவர் நாடு திரும்பிய பின்னர் ஓகஸ்ட் மாதம் 2ஆம் வாரத்தில் இந்த நியமனங்கள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை புதிய அமைப்பாளர்களை நியமிக்கும்போது சிரேஷ்ட தலைவர்களை கொண்ட நேர்முகத் தேர்வு குழுவொன்றை ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர்களான கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச,பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா,பொருளாளர் செனரத் கபுகொட்டுவ மற்றும் சட்டச் செயலாளர் தயா பெல்பொல ஆகியோர் அந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

புதிய தொகுதி அமைப்பாளர்களுக்காக விண்ணப்பம் கோரப்பட்டு அவற்றை ஆய்வுக் குட்படுத்தி நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட பின்னர் தெரிவு செய்யப்படவுள்ளனர். (ஸ்ரீ-4)

# வெளிநாட்டு வைத்தியர்களின் தகைமை குறித்து ஆராய்வதற்கு நடவடிக்கை

## சுகாதார அமைச்சு தகவல்

தனியார் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வெளிநாட்டு வைத்திய அதிகாரிகளின் தகைமைகள் குறித்து ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய உரிய தகைமைகளை பூர்த்திசெய்யாமல் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வெளிநாட்டு வைத்திய அதிகாரிகள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவொன்றை சுகாதார அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார்.

தனியார் வைத்தியாசாலைகளில் கடமையாற்றும் தகுதியற்ற சில வெளிநாட்டு வைத்திய அதிகாரிகள் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதினால் நோயர்ளர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சின் செயலாளர் வெளிநாட்டு வைத்திய அதிகாரிகள் குறித்து ஆராய்வதற்கென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழுவொன்றை நியமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கை கிடைக்கும் வரை வெளிநாட்டு வைத்திய அதிகாரிகளை இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யும் நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# சர்ச்சைக்குரிய பெற்றோல் பாவனை குறித்து 2 ஆயிரத்து 500 எழுத்துமூல முறைப்பாடுகள்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய பெற்றோல் பயன்பாட்டினால் வாகனங்கள் செயலிழந்தமைக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தொலைபேசிமூலம் வழங்கிய முறைப்பாடுகள் போதுமானதல்லவென இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

தொலைபேசிமூலம் முறைப்பாடு செய்த போது எழுத்துமூல முறைப்பாடுகளை வழங்க வேண்டுமென கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாகனங்களுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் அதனை திருத்துவதற்கான செலவு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் வழங்க வேண்டுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய பெற்றோல் பயன்பாட்டினால் வாகனங்கள் செயலிழந்தமை தொடர்பாக தொலைபேசியூடாக இதுவரை நான்காயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளை ஆராயும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்ச்சைக்குரிய பெற்றோல் பயன்பாட்டில் வாகனங்கள் செயலிழந்தமை தொடர்பாக இரண்டாயிரத்து 500 எழுத்துமூல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# தமிழ் மக்கள் சலுகைகளுக்காக ஏமாறுபவர்களல்ல; கொள்கைகளில் பற்றுறுதி கொண்டவர்கள்

## ஐ.தே.க.தெரிவிப்பு

வடக்கு மக்கள் அபிவிருத்தியை கருத்திற் கொள்ளாது கொள்கைகளுக்கே முக்கியத்து வமளித்து வாக்களித்துள்ளனர். எனவே வடக்கு மக்களின் முன்மாதிரியை தெற்கு மக்கள் பாடமாகக் கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவுரை வழங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டவற்றை பெற்றுக் கொண்ட வடக்கு மக்கள் தேர்தலில் தமக்கு தேவையானவர்களுக்கே வாக்களித் துள்ளனர். இது சிறந்த ஆரோக்கியமான விடயமாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு பகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ள வெற்றி மற்றும் தென்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சி அடைந்துள்ள தோல்வி என்பன குறித்து விபரிக்கையிலேயே தயாசிறி ஜயசேகர இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அரசாங்கம் தேர்தலை பகுதி பகுதியாக நடத்தி தெற்கில் வெற்றி பெற்றுள்ளது. தேர்தல் பிற்போடப்பட்டு நடத்தப்பட்டமையினாலேயே அரசாங்கம் இவ்வாறான வெற்றியை பெற்றுள்ளது. மேலும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான வேலைத்திட்டங்களை காட்டி தெற்கு மக்களின் வாக்குகள் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை தெற்கில் வாக்களிப்பு வீதம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதிலிருந்து மக்கள் எந்தளவு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பது புரிகின்றது.

வடக்கில் அரசாங்கம் தேர்தலில் வெற்றி பெறும் பொருட்டு அரச இயந்திரத்தை பயன்படுத்தியது. அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு சபைகளுக்கும் பொறுப்பாக செயற்பட்டதுடன் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் தமிழ் மக்கள் சலுகைகளைக் கண்டு ஏமார்ந்து போகாமல் கொள்கைகளுக்காக வாக்களித்துள்ளனர். இவ்வாறு வெளிப் படைத்தன்மையுடன் செயற்பட்ட வடக்கு மக்களிடம் நாங்கள் தலைவணங்குகின்றோம்.

வடக்கு மக்களின் இந்த முன்னுதாரணத்தை தெற்கு மக்கள் படிப்பினையாகக் கொள்ள வேண்டும். வெறுமனே அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் சலுகைகளையும் பார்த்து வடக்கு மக்கள் ஏமார்ந்து விடவில்லை. தாம் பிரதிநிதித்துவம் செய்யும் கொள்கைகளுக்கு வாக்களித்துள்ளனர்.

அரசாங்கம் வழங்கிய சலுகைகளை பெற்றுக் கொண்ட மக்கள் தீர்க்கமான கட்டத்தில் தீர்க்கமான தீர்மானத்தை எடுத்துள்ளனர். இது ஆரோக்கியமான நகர்வு என்றே நாங்கள் கருதுகின்றோம் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-4)

# இதுவரை வாக்காளர் பதிவு மேற்கொள்ளாதோருக்கு

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக குடியிருப்பவர்கள் வாக்களிக்க தகுதியுடையவர்களாயின் இதுவரை தங்கள் பெயர்களை பதிவு செய்யாது இருப்பின் உடனடியாக தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடம் பதிவு செய்யுமாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-246)

# சிப்பாயின் மரணத்தில் சந்தேகம் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

வட பகுதியில் இராணுவக் கடமையில் இருந்த போது கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் உயிரிழந்ததாக் கூறப்படும் மதுசங்க என்ற படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் புத்தளம் மாவட்டத்தில் நாத்தாண்டிய தும்மோதர என்ற இடத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீண்டும் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.

தனது மகனின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக ஜனாதிபதி முதற்கொண்டு சகல மட்டங்களிலும் தான் முறைப்பாடு செய்தும் பலன் கிட்டவில்லையென உயிரிழந்த சிப்பாயின் தாய் கூறுகிறார்.

உயிரிழந்த சிப்பாயின் உடலில் குறிப்பாக தலை, கழுத்து, வயிற்றுப் பகுதிகளில் பெருமளவு அடிகாயங்கள் இருப்பதாகவும் எலும்பு முறிவுகள் காணப்படுவதாகவும் வவுனியா வைத்தியசாலையிலிருந்து கிடைத்த பிரேதப் பரிசோதனை அறிக்கை மூலம் தெரிய வந்ததன் பின்னணியிலேயே முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடை பெற்று வருகின்றது.

தனது மகன் சக இராணுவத்தினராலேயே அடித்துக் கொல்லப்பட்டுள்ளதாக சந்தேகிப்பதாகவே உயிரிழந்த சிப்பாயின் தாய் பிபிசியிடம் கூறினார்.

உயிராபத்தை ஏற்படுத்தும் காயங்கள் இருந்த நிலையில் ஐந்து மணிநேரம் கழித்தே சிப்பாய் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவரின் சகோதரர் முறையிட்டுள்ளார். தோண்டியெடுக்கப்பட்ட சடலம் மேலதிக பரிசோதனைகளுக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (4)

# ஆடி அமாவாசை தினத்தன்று யுத்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கு பிரார்த்தனை

ஆடி அமாவாசை தினத்தன்று வன்னியில் இறுதிக்கட்ட யுத்தத்தில் இறந்த மக்களை நினைவு கூர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை வைபவங்கள் நடைபெறவுள்ளன. அகில இலங்கை இந்து மாமன்றம் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய அவருடைய வழிகாட்டலில் வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இம்முறை ஆடி அமாவாசை தினத்தன்று இறுதிக்கட்ட யுத்தத்தில் இறந்த மக்களை நினைவு கூர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை வைபவங்கள் நடத்தப்படவுள்ளது. வடமாகாணத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள முக்கிய சிவன்ஆலயங்களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடை பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆடி அமாவாசை விபரம் எதிர்வரும் சனிக்கிழமையாகும். தந்தையை இழந்தவர்கள் இத் தினத்தில் பிதிர்க்கடன் செய்து விரதம் அனுஷ்டிப்பது பாரம்பரிய முறையாகும். (ஸ்ரீ-4)


யாழ் மண்ணில் வாழும் மாணவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

ஆஸ்திரேலிய பலராட் (Ballarat) பல்கலைக்கழகத்தின்
விசேட புலமைப் பரிசில்களும் கருத்தரங்கும்
கருத்தரங்கில் பங்கு கொண்டு ரூ. 200,000 வரை புலமை பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள்

University of Ballarat
Learn to succeed
SRI LANKA STUDY CENTRE
சிறந்த போதனை தரத்திற்காக 5 நட்சத்திரத்தினை கொண்டு ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தினால் விருதளிக்கப்பட்டுள்ளது

சிறந்த கணினித்துறை / வணிகத்துறை பட்ட படிப்புகள்

FOUNDATION - க.பொ.த. சா/தர பரீட்சை முடித்தவர்கள்
Bachelor in Information Technology
Bachelor in Business
Bachelor in Commerce
MBS - (HR, Marketing, Finance)
MSc Information Technology
MSc Information Systems
Courses by IBM

யாழ் மண்ணில் இரண்டு சிறந்த மாணாக்கருக்கு பட்ட படிப்பிற்கான முழுமையான புலமைப் பரிசில்கள்.

கருத்தரங்கிற்கு சமுகமளித்து உங்கள் கனவை நனவாக்கிக் கொள்ளுங்கள்



பலராட் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிக்கான அத்தியட்சகர் திரு. பிரயன் டிகோல் அவர்களை சந்தித்து உங்கள் கேள்விகளுக்கு விடை காணுங்கள்.

நீங்கள் யாழில் இக்கற்கைநெறிக்கு பதிவு செய்து ஆஸ்திரேலிய IBM நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராகிய கலாநிதி ஜோன் ஹார்வியிடம் பட்ட படிப்பிற்கான Offer Letter ஐ நம்முடைய கொழும்பு கிளையில் ஆகஸ்ட் 14ம் திகதி பெற்றுக் கொள்ளுங்கள்.

நம் அனைத்து தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளும்
உலக பிரசித்திப்பெற்ற IBM நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டவை


கருத்தரங்கு விபரம்
இடம் : Green Grass Hotel, இல. 33, ஆசீர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 2011 ஜூலை மாதம் 30ம் திகதி (சனிக்கிழமை)
நேரம் : காலை 10.00 மணிக்கு

மேலதிக விபரங்களுக்கு : நிசாந்தன் (Jaffna) 071 8561536

No: 113, "Habitat House", Dutugemunu Street, Kohuwala.
Tel: 0112 817317, 0115 553237
E-mail: info@ubsrilanka.lk web: www.ubsrilanka.lk
Eastern Province: 077 4056741 Kandy: 077 3066411 Jaffna: 071 8561536
ATMC

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் — தற்காலிக குடிசைகள் தீக்கிரை —

## சம்மாந்துறையில் இனந்தெரியாதோர் அட்டூழியம்



(மட்டக்களப்பு)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புர கிராமத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட் டவர்களுக்கு தற்காலிகமாக அமைத்துக் கொடுக் கப்பட்டிருந்த 15 குடிசைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு 1.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளன.

கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இஸ்மாயில்புர கிராமத்தில் தற்காலிகமாக 150க்கும் மேற்பட்ட குடிசைகள் அமைக்கப் பட்டு வழங்கப்பட்டிருந்தன.

இதில் 15 குடி சைகளே நேற்று முன்தினம் நள்ளிரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

# போலி பிரசாரங்களுக்கு சர்வதேச சமூகம் செவிமடுக்கக்கூடாது

## ரோஹித போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ புலி அனுதாபிகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போலி பிரசாரங் களுக்கு சர்வதேச சமூகம் செவிமடுக்க கூடாது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வடக்கு -கிழக்கில் மீளவும் ஜனநாயக கட்டமைப்பு உருவாக் கப்பட்டுள்ளமையை சாதகமான விளைவாக நோக்க வேண்டும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நல்லிணக்கப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள் கைகளுக்கு கிடைத்த வெற்றியாகக் கருதப் படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் அரசாங்கம் அடக்குமுறைக ளைப் பிரயோகித்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றியீட்டியிருக்க சாத்தியமில்லை. மூன்று தசாப்தகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் சிக் கியிருந்த மக்கள் தங்களது வாக்குகளை அளிப்பதற்கு சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-4)

# விடுதலைப்புலி சந்தேகநபரின் அடிப்படை உரிமை மனு நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் தன்னை விடுதலை செய்யக்கோரி நீதி மன்றில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. குறித்த சந் தேகநபர் தனது சட்டத்தரணி ஊடாக உயர் நீதிமன்றில் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

நீதிமன்றில் மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேகநபருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வவுனியா மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபரின் மனுவை விசாரணைக்கு எடுத்து கொள்ளாத உயர் நீதிமன்றம் நிராகரித்தது. சந்தேகநபர் யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங் களில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடு பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)


# யாழ்ப்பாணம் மாநகர சபை

## பொதுசன நூலகம்/சுப்பிரமணியம் பூங்கா

## தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ். பொதுசன நூலகத்திற்கும் சுப்பிரமணியம் பூங்காவிற்கும் 01.09.2011 தொடக்கம் ஒருவருட காலத்திற்கு தினமும் 24 மணி நேரம் பாதுகாப்புச் சேவை வழங்கக்கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நூலகத்தில் பகல் 03 பேரும் இரவு 03 பேரும், பூங்காவில் பகல் ஒருவரும் இரவு இருவரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட வேண்டும். தெரிவு செய்யப்படும் நிறுவனம் மாநகர சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதுடன், சித்திபெறும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யும் போது ரூபா 100,000/= பெறுமதியான பிணைமுறி ஒன்று வழங்கல் வேண்டும்.

தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அடிப்படை வேதன அளவிற்குக் குறைவாக கோரப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

VAT, EPF, ETF, Nation Building Tax போன்ற வரிக்கட்டணங்கள் நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும். யாழ். மாநகர சபை பொறுப்பேற்கப் மாட்டாது.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப்படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் ரூபா 400/= (வற்வரி நீங்கலாக) ம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் ரூபா 1000/= உம் செலுத்தி மாநகர சபை அலுவலகத்தில் 15.08.2011 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப் பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

- விண்ணப்பங்கள் யாவும் 23.08.2011 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 24.08.2011 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்படும். அப்போது விரும்பிய விண்ணப்பகாரர் பார்வையிடலாம்.

யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.
27.07.2011

(ஐ-3854)


# சட்டவிரோதமாக புகலிடம் கோரும் இலங்கையர்களுக்கு ஆஸி. எச்சரிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்கள்மூலம் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் இனிமேல் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு வருபவர்கள் முடிவில் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று கொழும்பிலுள்ள அவுஸ்திரேலியா உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் சட்டவிரோத புகலிடக் கோரிக் கையாளர்களை மலேசியாவுக்கு அனுப்பு வது தொடர்பான உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்குமிடையில் கைச்சாத்திடப் பட்டு ள்ளது. இந்த உடன்படிக்கைக்கு அமைய அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் சட்டவி ரோதக் குடியேற்றவாசிகள் இனிமேல் மலேசி யாவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மலேசியாவில் ஏற்கனவே 90 ஆயிரத் திற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர் கள் புகலிடம் கோரி விண்ணப்பங்களை பரிசீலித்த பின்னரே புதிதாகச் செல்பவர் களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் மலேசியாவில் ஐக் கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தில் யு.என்.எச்.சி.ஆர் 2011 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்த புகலிடக் கோரிக்கை யாளர்கள் மாத்திரமே படிப்படியாக அவுஸ்தி ரேலியாவில் குடியமர்த்தவுள்ளனர் என கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதன்மூலமே பிராந்திய பிரச்சினைகளுக் கான தீர்வை எட்டமுடியும் என அவுஸ்திரே லியா நம்புகிறது. ஆட்கடத்தல் பிரச்சினை தொடர்பாக இலங்கை உள்ளிட்ட ஏனைய நாடுகளுடன் அவுஸ்திரேலியா இணைந்து செயற்படுகிறது என்றும் உயர்ஸ்தானிகரா லயம் மேலும் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-4)

# — தெற்கு அதிவேக நெடுஞ்சாலை —

## இம்மாதம் இறுதியில் மக்கள் பாவனைக்கு



(கொழும்பு)

இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை இம்மாதம் இறுதியில் மக்கள் பாவனைக்குக்கிட்ட உள்ளதாக நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங் கள் பிரதி அமைச்சர் நிர்மல் கொத்தலாவல நம்பிக்கை தெரிவித்தார்.

ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை இதுவாகும்.

கொட்டாவை-தொடங்கொட, தொடங்கொட-குருந்துகஹ, ஹெதெம்ம -குருந்துகஹெ. தெம்ம-பின்னதூவ. பின்னதூவ-மாத்தறை ஆகிய நான்கு கட்டப்பணிகளும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக கூறிய அவர் இதன்மூலம் காலி துறைமுகத்திலிருந்து கொள் கலன்களை புதிய நெடுஞ்சாலையின் ஊடாக கொழும்பிற்கு கொண்டுவரும் பணி ஆரம்பிக் கப்பட உள்ளதாகவும் சுட்டிக்காட் டினார்.

ஒன்பது நுழைவுப் பாதைகளையும் பாரிய ஏழு பாலங்களையும் இந் நெடுஞ்சாலை கொண்டுள்ளது. இலங்கையில் நீளமான பாலமாக காணப்படும் 695 மீற்றர் நீளமான பெந்தோட்ட பாலம் மற்றும் 310 மீற்றர் நீளமான களுகங்கை பாலம் என்பன அதில் இணைந்துள்ளன.

அதிவேக நெடுஞ்சாலைக்கான நுழைவாயில் கொட்டாவையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

கொழும்பு வெளிச்சுற்று வட்டப் பாதைகளான கட்டுநாயக்க, இரத்தினபுரி மற்றும் மாத்தறை பாதைகள் இந்த நுழைவாயிலுடன் இணைவதாகவும் இரத்தினபுரி, கொழும்பு -கொழும்பு வீதி கொட்டாவை நுழைவாயிலுடன் மேம்பாலம் மூலம் இணைக்கப்படுவதாகவும் பிரதி அமைச்சர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-4)

# உற்றறி கோட்பாடு

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

09



பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறிகோட்பாடு, இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

பெண்ணிய உற்...

2. பெண்கள் தமக்குரிய தனித்துவமான உணர்வுகளைக் கலை இலக்கியங்களிலே ஊறுபடாது வெளிப்படுத்துதல்.

3. அத்தகைய தனித்துவமான வெளிப்பாட்டுக்குரிய பொருத்தமான பெண் மொழியை உருவாக்குதல்.

4. பெண்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஒற்றை நலிவு வகைமையைத் தகர்த்து மாற்றியமைத்தல்

ஆண்மை ஓங்கலின் தராதரங்களைப் பெண்களும் எட்ட வேண்டும் என்ற கருத்து பெண்ணிய எழுத்தாக்கங்களில் வளர்ச்சியுறலாயிற்று. ஆண் ஓங்கலை அடியொற்றியும் நடுநாயகப்படுத்தியும் உருவாக்கப்பட்ட மொழியையும் அதனை அடியொற்றிய இருநிலை (Binary) எதிர்வடிவங்களையும் அவற்றில் உட்பொதிந்த ஒடுக்கு முறைகளையும் ஆய்வாளர் வெளிப்படுத்தினர். (Cixous and Clement, 1986:15)

பெண்ணிய நோக்கு, கலை இலக்கியத் திறனாய்வுகளிலே ஆழ்ந்தும் அகன்றும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. ஆண் ஓங்கற் கட்டுமானத்தை (Masculinity) மாற்றியமைத்தலும் தகர்த்தலும் கலை இலக்கியத் திறனாய்வுகளிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெண்ணியத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஆண் ஓங்கற் கட்டுமானத்தை மீள் வரைவிலக்கணப்படுத்தும் வகையில் ரோவினா சப்மன் "புதிய மனிதன்" (New Man) என்ற கருத்துருவத்தை முன்வைத்துள்ளார். (Chapman, 1988:226) புதிய மனிதன் நுகர்வுச் சமூகத்தின் கண்டுபிடிப்பாக முகிழ்ந்தெழுந்துள்ளான். பாரம்பரியமான பெண்கள் மேற்கொள்ளும் குடும்பச் செயற்பாடுகளை, மேற்கொள்ளும் அந்தப் புதிய மனிதன் எங்கும் உலா வருகின்றான். விளம்பரங்களிலும் முகம் காட்டுகின்றான். பெண்ணிய கருத்தியலின் தேவைகளுக்கு இயைபுபடுகின்றான்.

அவ்வாறு உருவாக்கம் பெற்ற கருத்தியலை அடியொற்றிய கலை இலக்கிய ஆக்கங்களும் மேற்கிளம்பத் தொடங்கிய வண்ணமுள்ளன. ஆண்கள் மரபு வழியான புனைவுகளும் காட்சிப்படுத்தலும் கட்டுமைகளும் தகர்த்து நொறுக்கப்படுகின்றன.

**புதிய எழுச்சிகள்**

கலை இலக்கிய ஆக்கங்களிலும் திறனாய்வு முயற்சிகளிலும் புதிய புதிய எழுச்சிகள் தோற்றம் பெற்று வருகின்றன. அவ்வகையிலேயே பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

(1) முதலாளியத்தின் புதிய வளர்ச்சிக் கோலங்களும் பொதுக் கவர்ச்சிக் கலை (Popular Art) யின் வளர்ச்சியும்.

(2) பின்காலனியம், கிழக்கியல் (Orientalism) முதலாம் கோட்பாடுகளின் வளர்ச்சி.

(3) ஓரங்கட்டப்பட்ட விளிம்பு நிலை உணர்வுகளை வெளிக் கொண்டு வருதல்.

(4) புலச் சிதறல் (Diaspora) மற்றும் தேசிய இனங்களின் அடையாள நெருக்கடி முதலியவற்றை அடியொற்றிய புதிய கலை இலக்கிய வடிவங்களின் எழுச்சி.

(5) ஐரோப்பிய மையவாதத்தின் ஆதிக்கப் பரிமாணங்கள் வெளிக் கொண்டுவரப்படுதலும், மேலாதிக்கத்தினாற் கட்டுமை செய்யப்பட்ட மொழியை உடைத்தலும்.

(6) ஒடுக்குமுறைக்கு எதிராக அறைகூவல் விடுக்கும் தலித்தியமும் உற்றெழலும் (Resistance)


சமூக நிலவரங்களின் தொடர் மாற்றங்களும் அதன் வழியாகத் தெறித்தெழும் அறிவுத் தேவைகளும், அறிகை இடைவெளிகளை நிரப்பும் செயற்பாடுகளும், கோட்பாடுகளை முடிவிலியாய் உருவாக்கிய வண்ணமுள்ளன. அந்நிலையிலே கலை இலக்கியங்கள் பற்றிய புலக்காட்சியைப் புரிந்து கொள்ளவும், பொருள் கோடலை ஆழப்படுத்திக் கொள்ளவும் வளர்ந்து வரும் மார்க்சிய அறிவை உள்வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

சோசலிசப் புரட்சியை உருவாக்கிய நாடுகளின் மேலோங்கிய கருத்தியலாக முதலாளியம் வலிமை பெற்று வரும் நிலையில் உற்றறி கோட்பாட்டை மேலும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டிய தேவை சமூவியலிலும் மானிடப் பண்பியலிலும் எழுந்துள்ளது.

உற்றறிகோட்பாடு பல நிலைகளிலும் சமூகத்தையும் இலக்கியங்களையும் அறிவதற்குரிய வாயில்களைத் திறந்து விடுகின்றது.

(முற்றும்)

# மனதை பிரயோகித்தல்



ஆன்மீகம் 02

மனம் தன்னைப் பல்வேறு விடயங்களுடன் அடையாளப்படுத்திக் கொண்டதால், தெய்வீக நிலைக்குச் செல்லும் ஏணியாக இருக்க வேண்டிய மனம் துரதிஷ்டவசமாக நரகத்துக்குச் செல்லும் படிக்கட்டுகளாய் மாறிவிட்டது. மக்கள் என்னிடம், "சத்குரு நீங்கள் கேட் காமலேயே ஒரு மகத்தான விடயம் உங்கள் வாழ்க்கையில் நடந்து விட்டது. ஒரு வேளை அதற்கு நீங்கள் நேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட ஒன்று எங்களுக்கு எப்போது நடக்கும்?" என்று கேட்கின்றனர். யாரும் எதையும் தேர்ந்தெடுக்கவில்லை. உடல், ஆண்- பெண் பேதம், குடும்பம், தகுதிகள், சமூகம், சாதி, இனம், மதம், மொழி, தேசம் ஆகிய எதனோடும் உங்கள் அறிவு அடையாளம் கொள்ளாத போது எந்தவொரு மனிதனும் இயல்பான உச்ச நிலையை அடைய முடியம். இதைத்தவிர வேறு வழியில்லை.

ஈஷா பள்ளியை தொடக்கியபோது இது ஆன்மிகப் பள்ளியா? மாணவர்களுக்கு ஆன்மீகம் போதிப்பிர்களா? போன்ற கோள்விகள் எழுந்தன. "நிச்சயமாக அப்படிச் செய்யப் போவதில்லை" என்று பதில் கூறினோம். குழந்தைப் பருவத்திலிருந்தே அடையாளமின்றி வளர்க்கப்பட்டால் ஒவ்வொரு மனிதனும் இயல்பாகவே ஞானடைமதலை நோக்கிச் செல்வான். எனவே உளத்தின் வித்தையை குழப்பமாக உணராமல் அற்புதமான ஒருங்கிணைப்பாக உணர வேண்டுமானால், அறிவு எதனோடும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாமல் இருக்க வேண்டியது மிக அவசியம். ஏனெனில் வாழ்க்கையையும் சிதைத்து விடுகிறது.

அக்பர், குழந்தையாக இருந்த போது அவருடைய தாய் இறந்து போனதாலோ அல்லது மகாராணியாக இருந்ததாலோ வேறொரு பெண்ணிடம் பாலருந்தி வளர்ந்தார். அந்தப் பெண்ணுக்கும் ஒரு மகன் இருந்தான். அக்பர் பேரரசரான பிறகு தனக்குப் பாலூட்டிய தாய்க்கு ஒரு கிராமத்தையே தானமாகக் கொடுத்தார். அந்தத் தாயின் மகன் வளர்ந்து பொரியவனாகி அந்தச் சொத்துக்களை எல்லாம் வீணாக்கி விட்டான். அப்போது ஒரு நாள் அவனுக்கு ஒரு எண்ணம் உதித்தது. அரசருக்கும் என்தாய் பாலூட்டியுள்ளதால் ஒரு விதத்தில் நான் அவருக் குச் சகோதர். எனவே எனக்கு உதவ அவர் கடமைப் பட்டுள்ளார். நான் ஏதாவது கேட்டால் அவரால் மறுக்க முடியாது என்ற நினைப்புடன் அக்பரிடம் சென்றார். அக்பர் அவரை மரியாதையாக உபசரித்து, அவரை சகோதரர் என்று அரசவையில் அனைவருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். பின்பு அரண் மனையில் தங்க வைத்தார். அக்பரின் சகோதரர் என்பதால் எதுவும் புரியாவிட்டாலும் அக்பருடன் பல அரச்வைக் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

சில வாரங்கள் கழித்து அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது அக்பருக்கு அருமையான மனிதர்களும் எல்லாவற்றிற்கும் மேலாக பீர்பால் போன்றவர்களும் உள்ளனர். அதனால் தான் அவர் சிறந்து விளங்குகிறார். எனவே எனக்கும் பீர்பால் போன்ற ஒருவர் கிடைத்தால் மாமனிதனாகி விடுவேன் என்று நினைத்து அக்பரிடம் இதனை வெளிப்படுத்தினார். "பீர்பால் உங்களோடு இருப்பதால் நீங்கள் சிறந்து விளங்குகிறீர்கள். எனக்கும் பீர்பால் போன்று யாராவது இருந்தால் நன்றாக இருக்கும். உங்களுடன்தான் பலர் உள்ளனரே பீர்பாலை என்னுடன் அனுப்பி வையுங்கள்" என்று கேட்டார்.

அவர் அக்பருக்கு சில நாட்கள் மூத்தவராக இருந்ததால் அக்பர் அவரை அண்ணனாகவே பாவித்தார். தனது மோசமான சூழ்நிலையைக் காட்டி, தனக்கு ஏதாவது செய்யுமாறு கேட்கும் அண்ணனிடம் அவரால் மறுத்துக் கூற முடியவில்லை. எனவே அக்பர், அவரிடம் பீர்பாலை அழைத்துச் செல்லுமாறு கூறிவிட்டார். அரசவையில் "பீர்பால் என் அண்ணனுடன் நாளை காலை புறப்படுகிறார்" என்று அறிவித்து விட்டார் ஒரு முட்டாளுடன் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய சூழலில் இருப்பதை அறிந்து கொண்ட பீர்பால் "மாட்சிமை பொருந்திய அரசே! உங்கள் அண்ணனுக்கு ஒரு அறிவுள்ள துணை தேவை. எனவே என்னுடைய அண்ணனை அனுப்பி வைக்கிறேன். சரிதானே?" என்று கேட்டார். பீர்பால் திறமையானவராக இருப்பதால் அவருடைய அண்ணனும் அப்படித்தான் இருப்பார். என்று எண்ணி "மிகவும் நல்லது, நான் அவருடைய அண்ணனையே அழைத்துச் செல்கிறேன்" என்று அக்பரின் அண்ணன் கூறினார். அக்பர் மிகவும் நிம்மதியடைந்தார். ஏனெனில் அண்ணனுக்காக பீர்பாலை அனுப்ப சம்மதித்திருந்தாலும் பீர்பாலை இழப்பதில் அக்பருக்கு சிறிதுகூட விருப்பமில்லை.


(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை இனங்கண்டு அதிலிருந்து மீள்வோம்

எம்மிடையே புற்றுநோய் பற்றிய அச்சம் பரவி வருகின்றது. புற்று நோய் என்பது என்ன? எவ்வாறு அதிலிருந்து எம்மைக் காப்பாற்றுவது என்பது எல்லோரிடமும் எழும் வினாக்களாகும்.

மனித உடலில் இழையம், வன்கூடு, குருதி ஆகியவற்றிலுள்ள கலங்களின் தொடர்ச்சியான மிகையான வளர்ச்சியே புற்றுநோய்




எனப்படும். சாதாரண வளர்ச்சியின் போது ஏற்படும் தடை, கட்டுப்பாடு, உயிரியல் எல்லைப்படுத்தும் காரணிகள் புற்றுநோய் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை.

புற்றுநோய் கலங்கள் பலதட்வைகள் பிரிவடைந்து சாதாரண கலங்களைச் சூழ்ந்து அவற்றிலிருந்து போசணையைப் பெறுகின்றன. இவ்வாறு வளர்ச்சி அடைவதால் அசாதாரண இழையத் திணிவுகள் உருவாகின்றன. இவற்றை நாம், கழலைகள் அல்லது கட்டிகள் என்கின்றோம். இவை உடலங்களை அழுத்தும் போது அல்லது உணவுக் கால்வாய், சுவாசப்பாதை தடைப்புடுவதால் நோயாளி அதிக பாதிப்பிற்கு உள்ளாவார்.

நாம் பல வகையான புற்றுநோயாளிகளை காணக்கூடியதாக உள்ளது. இவற்றில் பெரும்பாலானவர்கள் வாய்ப்புற்றுநோய், மார்பகப் புற்றுநோய், கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் போன்ற நோயால் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

இதைத் தவிர சுவாசப்பை புற்றுநோய், இரப்பைப் புற்றுநோய், தோல்புற்றுநோய்களால் பாதிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

மரணத்தின் வாசல் என வர்ணிக்கப்படும் இப்புற்றுநோய் எம்மவர் மத்தியில் ஏற்படப் பல காரணிகள் உள்ளன. எனினும் சரியான காரணிகள் இன்னமும் இனங்காணமுடியாதுள்ள போதிலும் இது வாழ்க்கை முறை, பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத் தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

ஆயினும் புற்றுநோயை ஏற்படுத்துவதற்கான காரணிகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக மாறுபட்ட உணவுப் பழக்கம், வாய்ச்சுகாதாரம் இன்மை, மதுபானம் அருந்துதல், புகையிலை, பாக்கு பாவித்தல, இரசாயனப் பொருட்கள், கதிர் வீச்சுகள், ஓமோன்களின் அதிகூளவான பாவனை, உடற்பயிற்சியின்மை, தவறான பாலியல் உ[illegible]கள்.

இவ்வாறான நடவடிக்கைகளை தவிர்ப்பதன் மூலம் இந்நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளலா.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆக்வே நாம் இந்நோய் வருமுன் காப்பதே சிறந்தது. இதற்கு தீயபழக்கவழக்கங்களை கைவிடுதலும் உணவுப் பழக்கவழக்கங்களில் கவனம் எடுத்தலும் மிக முக்கியமானதாகும்.

✷ மதுபானம் அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு சேர்த்து மெல்லல்

✷ செயற்கையாக அடைத்து விற்கப்படும் உணவுகளை அதிகம் உட்கொள்ளல்.

✷ அதிக கொழும்பு, புரதம் என்பவற்றை தவிர்த்தல்

✷ பங்கஸ் பிடித்த உணவுகளையும் பனங்கிழங்கு, நிலக்கடலை ஊறுகாய், அச்சாறு போன்றவற்றை உள்ளெடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும். அத்தோடு தொழிற்சாலைக்கு அருகில் குடியிருப்பதை தவிர்த்தல் வேண்டும்.

✷ A,B,E ஆகிய விற்றமின் அடங்கிய உணவு வகைகளும், பச்சை இலைக் கறி வகைகளையும் உண்ணல் வேண்டும்.


✷ நார் உணவுகள், முட்டைக் கோஸ் இலைக்றிகள் போன்றவற்றை உள்ளெடுத்தல்

தீராத வியாதி என நினைத்து வருந்தாமல் இதன் அரம்ப அறிகுறிகள் இனங்கண்டு உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறுவதன் மூலம் இலகுவாக குணப்படுத்தலாம்.

புற்று நோய் ஆரம்பநிலையில் அதன் பரவல் சிறிய நிலையிலிருக்கும்.

இந்நிலையில் புற்று நோய்கலங்களை சத்திரசிகிச்சை மூலம் முற்றாக அகற்றலும் கதிர்வீச்சு மற்றும் மருந்து சிகிச்சை மூலம் கலங்களை முற்றாக இல்லாது ஒழிக்க முடியும்.

ஆகவே அதன் ஆரம்ப அறிகுறிகள் சிலவற்றேனும் நாம் அறிந்திருக்க வேண்டும்.




ஆரம்ப அறிகுறிகளாக,

✷ குணமடையாத நோய் தோல் புண்

✷ மலம் கழித்தல், சிறுநீர் கழித்தலில் ஏற்படும் வித்தியாசம் நோ, அல்லது இரத்தம் வெளிவரல்,

✷ சடுதியாக வளரும் கட்டிகள்,

✷ உடல் நிறை குறைந்து போதல்,

✷ தொடர்ச்சியான இருமல், தொண்டை நோ, உணவு விழுங்குவதில் கஷ்டம்.

✷ பசியின்மை,

ஆர்.ரி.வி.சசிறேக்கா சுப்பிரமணியம்
மருத்துவபீட மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்.

பெண்யோனி வழியிலிருந்து அசாதாரண இரத்தம் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப் போக்கு ஏற்படும்.

இனி வருங்காலங்களில் நமக்கு சவாலாக அமையும் இப்புற்றுநோய்க்கான காரணிகளை தவிர்த்தலும், அதன் ஆரம்ப அறிகுறிகளை இனம்கண்டு உடனடியாக சிகிச்சை பெறுவதன் மூலம், நம்மை நாமே காப்பாற்றி கொள்ள முயல்வோம்.

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களாக தெரிவு

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இரண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை நகரசபைக்கு இலங்கை தமிழரசு கட்சி சார்பாக போட்டியிட்ட எம்.கே.சிவாஜிலிங்கம் இரண்டாவது அதிகூடிய வாக்குகளை பெற்றுள்ளார்.

இதேவேளை கெஸ்பாவ நகரசபைக்கு மக்கள் விடுதலை முன்னணி சார்பாக போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லஷ்மன் நிபுணாராட்சி அக்கட்சி சார்பாக அதிகூடிய வாக்குகளை பெற்றுள்ளார். எனினும் கெஸ்பாவ நகரசபை தேர்லில் மக்கள் விடுதலை முன்னணி மூன்றாம் இடத்தையே பெற்றது.

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நந்தண குணதிலக, கே.எ.பாயிஸ், அலிசாஹிர் மெளலானா மற்றும் ஏ.எம்.நௌஷாட் ஆகியோர் அதிகூடிய வாக்குகளை பெற்று உள்ளூராட்சி மன்ற தலைவர்களாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## வடக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

### பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு பிரஜைகள் பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெற்றுக் கொண்டு வடக்கு செல்ல வேண்டும் என்ற நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் சடுதியான அபகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடவுச்சீட்டை மட்டும் சமர்ப்பித்து வடக்கில் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள முடியும் என குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)

## புகலிடக் கோரிக்கையாளர் தொடர்பான அவுஸ்திரேலியாவின் திட்டத்திற்கு எதிர்ப்பு

புகலிடக் கோரிக்கையாளர்களை மலேசியாவிற்கு அனுப்பி வைக்கும் அவுஸ்திரேலியாவின் திட்டத்திற்கு அவுஸ்திரேலியாவின் முன்னணி மனித உரிமை அமைப்புக்களில் ஒன்றான மனித உரிமை ஆணைக்குழு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்களை பரிமாறிக் கொள்வது தொடர்பில் அவுஸ்திரேலியா மலேசியாவும் அண்மையில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தன. இந்த ஒப்பந்தமானது சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களுக்கு புறம்பானது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் புகலிடம் கோரும் சிறுவர் சிறுமியரும் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாவும் இது சர்வதேச சட்டங்களுக்கு புறம்பானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து 800 புகலிடக் கோரிக்கையாளர்கள் மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன் எதிர்வரும் நான்கு ஆண்டு காலப்பகுதியில் 4 ஆயிரம் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்வாங்கப் படவுள்ளனர்.

இந்த நடவடிக்கை சட்டவிரோத ஆட்கடத்தலை வர்த்தகமாக மேற்கொள்ளும் நபருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இதன்படி இனிவரும் காலங்களில் படகு மூலம் அவுஸ்திரேலியாவை சென்றடையும் புகலிடக் கோரிக்கையாளர்கள் உடனடியாக மலேசியாவிற்கு அனுப்பி வைக்கப்படுவர். ஐக்கிய நாடுகள் பிரகடனத்தில் கைச் சாத்திடப்படாத போதிலும் மலேசியாவில் பெரும் எண்ணிக்கையிலான புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் மலேசியாவில் புகலிடக் கோரிக்கையாளர்கள் உரிய முறையில் கவனிக்கப்படுவதில்லை என மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

குறிப்பாக இளம் புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்படக் கூடுமென அவுஸ்திரேலிய மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கெதரீன் பிரன்சன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புகலிடக் கோரிக்கையாளர்களின் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் எனவும் மலேசியாவுடனான ஒப்பந்தத்தில் புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலியா குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா

கடந்த 2010'ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையில் கணக்குகளை பேணி வரும் மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இடம் பெறவுள்ளது.

எனவே குறித்த மாணவர்களை வங்கி அலுவலக நேரத்தில் வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு முகாமையாளர் கேட்டுள்ளார். (ஸ்ரீ)

# இலங்கை, இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை- இந்தோனேசிய வெளி விவகார அமைச்சர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தைகளை வெளி விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இந்தோனேசியாவின் வெளிவிவகார அமைச்சர் மார்டி நாடெல் கேவாவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தோனேசியாவின் பாலியில் நடைபெற்ற 18ஆம் ஆசியான் மாநாட்டில் கலந்து கொண்ட போது இந்தச் சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளது.

பிராந்திய நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகளின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சரவை தவிர இந்தியா, சீனா, மலேசியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் அமைச்சர் பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

(ஸ்ரீ-4)

# உயர்தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு

ஈசொப்ற் கொம்பியூட்டர் பிறைவேட்ஸ்தாபனத்தினரின் அனுசரணையுடன் த. துசாந் ஞாபகார்த்த க.பொ. த உயர்தரக் கலைப்பிரிவு மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு கரவெட்டியில் அமைந்துள்ள வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொருளியல், தமிழ், அளவையியலும் விஞ்ஞான முறையும், இந்துநாகரிகம், அரசறிவியல் ஆகிய பாடங்களுக்கு கருத்தரங்குகள் நடைபெறும்.

இப்பாடங்கள் அனைத்தும் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்து நாகரிகப் பாடம் தவிர ஏனைய பாடங்களுக்கான கருத்தரங்குகள் அனைத்தும் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும். எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்து நாகரிகம் மாத்திரம் பிற்பகல் 2 மணி முதல் 6 மணிவரை நடைபெறும் என அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு பாசிக் நிறுவனத்தால் உதவிப் பொருட்கள்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் வசிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு நன்கொடையாகவும் சுழற்சி முறை கடனடிப்படையிலும் பெருந்தொகையான உதவிப் பொருட்கள் ஜப்பான் நாட்டின் பாசிக் நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, சென்மேரிஸ், ஆழியவளை வத்திராயன் ஆகிய 4 கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 49 பயனாளிகளுக்கு படகுகளுக்கான யமகா 9.9 குதிரை வலு கொண்ட வெளியணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பாசிக் நிறுவன பணியாளர்கள், 4 கிராமத்தின் கிராம சேவையாளர்கள், கடற்றொழிலாளர்கள், கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகிகள், மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-64)

# ஆசிய பிராந்திய உணவுப் பாதுகாப்பு மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பம்

ஆசிய பிராந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் மீன்வளர்ப்பு தொடர்பான அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இன்றும் நாளையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமாகும் என்று மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் 17 நாடுகளின் அமைச்சர்கள் உள்ளிட்ட 72 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

முக்கியமாக இந்தியாவின் அமைச்சர் ஒருவரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார். இதில் மீன்வளர்ப்பு விடயங்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆராயப்படும். வெறுமனே தொழில் நுட்ப விடயங்கள் குறித்து மட்டும் ஆராயப்படாமல் மீன்பிடி வளர்ச்சி குறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்படும்.

இலங்கையில் முதல் தடவையாக இம்முறை இவ்வாறான மாநாடு நடைபெறவுள்ளமை விஷேட அம்சமாகும். (ஸ்ரீ-4)

# ஹிக்கடுவயில் சுனாமி ஆராய்ச்சி நிறுவகம் அமைக்கப்படவுள்ளது

(கொழும்பு)

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் ஞாபக சின்னங்களையும் சுனாமி ஆராய்ச்சி தொடர்பான புதிய நுட்பங்களையும் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள சுனாமி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நூதனசாலையின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனமும் நூதனசாலையையும் ஹிக்கடுவ பிரதேச செயலக பிரிவில் உள்ளடங்கும் பெரலிய என்னும் இடத்தில் மூன்று ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படவுள்ளது.

இச்செயற்றிட்டத்துக்கான ஆரம்ப கட்ட வேலைகள் பூர்த்தியாகி விட்டன. இதற்கான நிர்மாணிப்பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இது சுனாமியின் போது பெரலியவில் ரயிலில் உயிரிழந்த 900 மக்களின் ஞாபகமாக அமையும் என அமைச்சரின் செயலாளர் விம்ல் ரூபசிங்க தெரிவித்தார். சுனாமி பற்றிய ஆராய்ச்சியே பிரதான நோக்கமாகும். சுனாமி ஆராய்ச்சி தொடர்பான கருவிகள் இந்த நிறுவகத்தில் காட்சிப்படுத்தப்படும்.

அத்தோடு சுனாமியின் போது இலங்கைக்கு வேறு நாடுகளிலிருந்து அடித்துவரப்பட்ட ஆடைகள், தளபாடங்கள் மீன்பிடி படகுகள் என பலவகைப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன என அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-4)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.07 28

★ *1493*-மொஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

★ *1540*-இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியின் ஆணைப்படி தோமஸ் குரொம்வெல் நாட்டுத் துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார். அதேநாளில் ஹென்றி தனது ஐந்தாவது மனைவி கத்தரீனை மணந்தான்.

★ *1586*-முதற்தடவையாக உருளைக் கிழங்கு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது.

★ *1609*-பெர்முடாவில் ஆங்கிலேயர்கள் குடியேறினர்.

★ *1794*-பிரெஞ்சுப் புரட்சி: மாக்சிமிலியன் ரோப்ஸ்பியர் தலை துண்டிக்கப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.

★ *1821*-பெரு ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ *1914*-முதலாம் உலகப் போர் ஆரம்பமானது. சேர்பியா மீது ஆஸ்திரியா- ஹங்கேரி போர் தொடுத்தன.

★ *1915*-ஐக்கிய அமெரிக்காவின் ஹெயிட்டி முற்றுகை ஆரம்பமானது.

★ *1943*-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹாம்பூர்க் நகர் மீது பிரித்தானியா குண்டுத் தாக்குதல் மேற்கொண்டதில் 42,000 ஜேர்மனியர்கள் கொல்லப்பட்டனர்.

★ *1945*-அமெரிக்க போர் விமானம் ஒன்று எம்பயர் ஸ்டேட் கட்டடத்தின் 79 ஆம் மாடியில் தவறுதலாக மோதியதில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1957*-ஜப்பானின் இசகாயா என்ற இடத்தில் மழை மற்றும் மண்சரிவு காரணமாக 992 பேர் கொல்லப்பட்டனர்.

★ *1965*-வியட்நாம் போர்: தெற்கு வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கையை 75,000 இலிருந்து 1,25,000 ஆக அதிகரிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் அறிவித்தார்.

★ *1976*-சீனாவில் டங்ஷான் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2,42,769 பேர் கொல்லப்பட்டனர். 1,64,851 பேர் காயமடைந்தனர்.

★ *1996*-வோஷிங்டனில் கென்னவிக் என்ற இடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

★ *2005*-ஐரியக் குடியரசு இராணுவம் தனது 30 ஆண்டு கால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.

★ *2005*-இங்கிலாந்து பேர்மிங்காம் நகரைச் சூறாவளி தாக்கியதில் 4,000,000 பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்தன. 39 பேர் காயமடைந்தனர்.

★ *2006*-ஈழப்போர்: வாகரையில் இலங்கைப் போர் விமானங்கள் தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**

★ *1936*-சோபர்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் துடுப்பாளர்

★ *1951*-சந்தியாகோ கலத்ராவா, ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கட்டடக் கலைஞர்

★ *1954*-குகொ சவெஸ், வெனிசுவேலா ஜனாதிபதி


★ *1977*-மனு ஜினோபிலி, ஆர்ஜெண்டீனிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

**சிறப்பு நாள்**

★ பெரு- சுதந்திர தினம் *(1821)*

# நவீன எண் சோதிடம்

04



## உடற்பலம் மிக்கவராயும் மனபலம் குன்றியவராயுமிருப்பர்

**உடல் எண் 1 உயிர் எண் 2**

1,10,19,28 ஆகிய தேதிகளில் பிறந்து, தேதி, மாதம், வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிரெண் 2 வந்தால், சூரியன் சந்திரன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவர் ஆவர். சுமாரான உயரமுடையவராகவும் அழகாகவும் காட்சியளிப்பார். சூரியனும் சந்திரனும் எவ்வாறு ஒன்றாகப் பிரகாசிக்க முடியாதோ அதைப்போன்று இவர்களது உடல் எண்ணாகிய 1 உம், உயிரெண்ணாகிய இரண்டும் ஒன்றுக்கொன்று சேராததால் இவர்களது வாழ்க்கையில் ஏதாவது ஒரு குறையும் அடிக்கடி குழப்பங்களும் வந்து கொண்டே இருக்கும். சந்திரன் எவ்வாறு 15 நாட்கள் தேய்ந்தும், 15 நாட்கள் வளர்ந்தும் வருகின்றதோ அதே போன்று இவர்களது மனம், 15 நாட்கள் குழப்பமாகவும் 15 நாட்கள் தெளிவாகவும் இருக்கும்.

திடீரென்று தனக்கு ஆபத்து வரப்போவதாக எண்ணி நிம்மதியை இழப்பர். ஆனால் பெயரைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமைத்து விட்டாலும் இயற்கையாகவே அமைந்திருந்தாலும் மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் அதிகம் இருக்கிறது. இவர்கள் உடல் வலிமையுள்ளவர்களாக இருந்தாலும் மனம் பலம் குறைந்தவர்களே. பிறருக்காகக் காரியங்கள் செய்கின்றபோது திடமாகச் செயற்படுவர். ஆண்களாக இருந்தால், பெண்களால் மன வேதனையும், பெண்களாக இருந்தால் ஆண்களால் மன வேதனையும் ஏற்படும். சிலருக்குப்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

பெற்றோர்களைப் பிரிவதோ, இழக்கவோ நேரலாம். திடீரென்று கவலைகள் உருவாகும். இவர்களுக்கு உடல் உறவு சம்பந்தமான நோய்கள் வரலாம். அழகாகக் காட்சியளிக்கும் இவர்கள், அன்பாகப் பேசக் கூடியவர்களே! நாம் கெட்டிக்காரத்தனமாகச் செயற்படுகிறோம். என்று சில காரியங்களில் இறங்கி ஏமாந்து விடுவர். அவ்வாறு ஏமாந்ததை வெளியில் சொல்லாது மறைக்கப்பார்ப்பர். அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் சிலர் மேலதிகாரிகளாலும், சக ஊழியர்களாலும் பிரச்சினைக்கு உள்ளாகின்றனர். தொழில் செய்யும் சிலர் தனது தொழிலில் குழப்பம் அடைகின்றனர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால் எல்லா வளங்களும் பெற்று வாழ்வர்.

மின்சாரம், அழகுசாதனங்கள், நெருப்பு சம்பந்தமான் தொழில்களை செய்து பணமீட்டுகின்றனர். இவர்களுக்கு தூர தேச பயணங்கள் செல்வதில் இலாபம் உண்டாகும். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பொருட்களை அனுப்புவதாலும் இலாபம் கிடைக்கும். இவர்கள் பெண்கள் விடயங்களில் நிதானமாகவும் முன் ஜாக்கிரதையாகவும் நடந்து கொள்வது அவசியம். பெயர் தனக்குப் பொருத்தமானதாக அமைந்து விட்டால் இவர்கள் யோகம் மிகுந்தவர்களாகவும், நல்ல வாழ்க்கைத் துணைவரை உடையவராகவும் இருப்பர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், கீழே குறிப்பிட்டுள்ளபடி பெயர் மாற்றம் செய்து கொள்வது நல்லது.

**தொழில்**

உத்தியோகம் பூர்ப்பவர் 60 சதவீதம் இருந்தால், ஏனைய தொழில் செய்வோர் 40 சதவீதம் ஆகும். இவர்களுக்கு ஆடம்பரப் பொருட்கள், மின்சாரம், நெருப்பு சம்பந்தமான தொழில்களாலும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை அனுப்புவதன் மூலமும் பணம் சம்பாதிப்பர்.

**நோய்**

இவர்களுக்கு இடல் உறவினால் வியாதிகள் உருவாகும். பல்வலி, தலைவலி, மூட்டுவலி, வயிற்றுவலி, போன்ற வியாதிகள் வர வாய்ப்பிருப்பதால் இதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை முன் கூட்டியே எடுத்துக்கொள்வது முக்கியம். ஆனால், பெயரைத் தனது பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக இங்கு கூறப்படும் பெயர் எண் பலனுக்கு ஏற்றவாறு, அமைத்துக் கொண்டால் நோய்கள் மாறும்; முன்னேற்றம் கூடும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரனாகிய 6 எண்களில் பெயர் வருகின்றவாறு அமைத்துக் கொள்வது சிறப்பாகும். 15,24,33,42,69 போன்ற எண்களில் பெயராகவோ, அல்லது வியாபார விலாசமாகவோ அமைத்துக் கொண்டால் நன்மை தரும்.

**பின்பற்றவேண்டியவை**

யோகமான எண்-6,2,7

யோகமான தேதிகள்-1,10,19, 28,6,15,24,7,16,25,

யோகமான மோதிரக்கல்-கனக புஷ்பராகம், முத்து, வைடூரியம்.

யோகமான நிறம்- வெளிர் மஞ்சள், இலேசான நீலம், வெளிர் பச்சை

ஆகாத தேதிகள்- 8,17,26,9, 18,27


ஆகாத நிறம்-கறுப்பு, சிவப்பு.

* * *

## பெயர் எண்களின் பலன்

**6 எண் பலன்**

முழுமையான சுக்கிர ஆதிக்கம் கொண்ட இந்த எண் வளமான வாழ்க்கையும், எல்லா விதத்திலும் திருப்தியான சூழ்நிலையையும் உருவாக்கும். சாதுவான குணம் கொண்ட இவர்களுக்கு பல நண்பர்கள் உண்டு. பெரும் திட்டங்களைப்



போட்டு செயற்படுத்தும் திறமையற்றவர்கள்.

**7 எண் பலன்**

முழுமையான கேது ஆதிக்கம் கொண்ட இந்த எண், பெயரில் வந்தால் தெய்வீக சக்தி கிடைக்கும். பலருக்கு அறிவுரை வழங்குவர். ஆனால் தன் சொந்த வாழ்க்கையில் நிலையில்லாது போய்விடும்.

**8 எண் பலன்**

பூரண சனி ஆதிக்கம் கொண்ட இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள், பல்வேறு துன்பங்களுக்கிடையே தனது காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவார்கள். திடீரென்று ஆபத்துக்களும் உண்டாகும். இந்த ஆபத்திலிருந்து தப்பித்த பின் அதைப்பற்றி அழகாக விமர்சிப்பர். இப்படிப் பல்வேறு சோதனையால் ஆத்மீக வாழ்க்கையில் ஆர்வத்தைக் காட்டுவர்.

**9 எண் பலன்**

எதிர் நீச்சல் போட்ட இவர்கள் பல்வேறு அனுபவங்களையும் பெற்று தூரதேச பயணங்களையும் செய்வர். இவர்ளுக்கு எதிர்ப்புக்கள் இருந்து கொண்டே இருக்கும். மன பலம் கொண்ட இவர்கள் பேச்சு ஆற்றலால் தனக்கென்று ஒரு சமுதாயத்தை அமைத்துக் கொண்டு எதிர்ப்புக்களை தகர்த்தெறிவர். பின் வாழ்க்கையில் எல்லா விதமான வசதிகளையும் பெற்று வாழ்வர். பெண்கள் விடயத்தில் கெட்ட பெயர் வரும். ஆனால், 2,11,20, 29,7,16,25 தேதியில் பிறந்தவர்கள் இந்த எண்ணில் பெயரை அமைத்துக் கொண்டால் துன்பத்துக்கு ஆளாவர்.

**10 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்களுக்கு எவ்வழியிலாவது முன்னேற்றம் கிட்டும். பலர் போற்றும் மனிதர்களாக வாழ்வர். 10 நாட்கள் வருமானத்தையும் ஒரே நாளில் பெற்று விடுவர். கையில் பணம் இருந்தால் சோம்பேறியாக இருந்து விடுவர். இவர்கள் வாழ்க்கை ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். நேர்மையான நடவடிக்கை உடையவராக இருந்தால், எப்பொழுதும் குன்றாத யோகம் உண்டு. பாதி நாட்களுக்கு வேண்டிய உணவை உண்டு, மீதி நாட்களில் உறங்கும் மலைப்பாம்பு போன்றவர்கள் என்று இவர்களைச் சொல்லலாம்.

**11 எண் பலன்**

சோதனையாலே வேதனையடைந்த இவர்கள் மனிதனால் ஒன்றும் முடியாது என்று கூறி விட்டு தெய்வ வழிபாட்டை மேற்கொண்டு சிறிது முன்னேறுவர். திடசித்தம் இல்லாத இவர்கள், எப்பொழுதும் குழம்பிக் கொண்டே இருப்பவர்; ஆனால், 7,16,25 தேதியில் பிறந்தவர்களுக்கு வெற்றி கிடைக்கும்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

**12 எண் பலன்**

1 என்ற சூரியனும் 2 என்ற சந்திரனும் சேர்ந்து 3 என்ற குரு வருவதால் ஒரு பொது நலவாதியாகவே வாழ்வர். எப்படிச் சந்திரனும், சூரியனும் ஒரே நேரத்தில் பிரகாசிக்க முடியாதோ, அதைப் போன்று தன் வாழ்க்கையில் பிரகாசத்தை அடைய முடியாது. நல்ல பேச்சு ஆற்றலும், பலருக்காகப் போராடுவதும் இந்த எண் காரர்களது அமைப்பாகும்.

(தொடரும்)

# ஜெயலலிதாவுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி



(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராம் முக்கிய சக்தியாக வெளிப்பட்டுள்ள நிலையில் அவருடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் இறங்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றுக்கொண்ட பின்னர் அவருடன் தாம் தொடர்புகளை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் இந்திய மத்திய அரசுடன் மட்டுமே தமது தொடர்புகள் இருக்கும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இருந்த போதிலும் தமிழகத்தின் உணர்வுகளைப் புறக்கணித்து தம் மால் செயற்பட முடியாது எனத் தெரிவித்த மத்திய அரசாங்கம் ஜெயலலிதாவுடன் நல்லுறவுகளை ஏற்படுத்துமாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுக்கு அறிவுறுத்தியிருந்தது.

இதனையடுத்து ஜெயலலிதாவுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அமைச்சர் பீரிஸ் அனுப்பி வைத்தார். இதன்பின்னர் ஜனாதிபதியின் ஆலோசகராகச் செயற்படும் மிலிந்த மொரகொட உட்பட வேறு சிலரை சென்னைக்கு தூது அனுப்பி ஜெயலலிதாவுடனான சந்திப்புக்கு முயற்சி செய்யப்பட்ட போதிலும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இந்தநிலையில் கடந்தவாரம் கொழும்பு வந்த இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் பிரசாத் காரியவசம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்திய பின்னர் சென்னை சென்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதியின் விசேட கடிதம் ஒன்று முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. இதில் போர் இடம்பெற்ற பகுதிகளுக்குநேரில் வந்து நிலைமைகளைப்பார்வையிடுமாறு ஜெயலலிதாவுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். ஜெயலலிதாவுடனான உறவுகளை வலுப்படுத்தும்



இராஜதந்திர காய் நகர்த்தலில் இது ஒரு முக்கிய மைல்கல் என கொழும்பில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக மேலும் சில நகர்வுகளை முன்னெடுப்பதற்கு கொழும்பு திட்டமிட்டு வருவதாகவும் இவை தொடர்பில் ஜெயலலிதாவின் பிரதிபலிப்பையே தற்போது கொழும்பு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரியவருகின்றன. (ஸ்ரீ-4)

## இலங்கை வங்கியின்
# உரும்பிராய் விரிவாக்கற்கிளை அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 72 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை வங்கியின் சுன்னாகம் மேற்தரக்கிளையின் விரிவாக்க அலுவலகமொன்று எதிர்வரும் முதலாம் திகதி இலக்கம் 39/1, பலாலி வீதி, உரும்பிராய் எனும் முகவரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

சுன்னாக கிளைமுகாமையாளர் பொன். பாலகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில்,

பிரதம விருந்தினராக வங்கியின் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறியும் சிறப்பு விருந்தினராக இலங்கைவங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயேந்திரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சுன்னாகம் கிளையின் நீண்ட காலம் கடமை புரிந்து ஓய்வு பெற்ற மூத்த வங்கியாளர்கள் கௌரவிப்பு இடம்பெறும். (ஸ்ரீ-4)

## இலங்கையின் கொலைக்களம்
# அமெ.காங்கிரஸ் மற்றும் செனட் சபைக்கு தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை

(கொழும்பு)

சனல் 4 தொலைக்காட்சி இலங்கை தொடர்பில் ஒளிப்பரப்பிய போர் குற்றம் குறித்த விபரணப்படம் பற்றி அமெரிக்க காங்கிரஸ் மற்றும் செனட் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்த அமெரிக்காவில் உள்ள இலங்கை தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக காங்கிரஸ் மற்றும் செனட் சபைகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் சனல் வீடியோ பொய்யானது என அமெரிக்க மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான தூதரகம் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதனடிப்படையில் கூட்டங்களை நடத்தி மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

இலங்கை தொடர்பில் அமெரிக்க அதிகாரிகள் மற்றும் மக்கள் மத்தியில் சிறந்த அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விக்ரமசிங்க மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-4)

# வடக்கு- கிழக்கு தமிழர்களிடம் மஹிந்த தோற்றுவிட்டார்

## ஏசியா ரைம்ஸ் இணையம் தெரிவிப்பு

இலங்கையின் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் இன்னும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தென்னிலங்கை சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளமையைக் காட்டுகிறது. இதனை இந்தியாவின் ஏசியா ரைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஏனினும் வடக்கு- கிழக்கு தமிழர்களிடம் அவர் தோற்றுப்போயுள்ளதாக அந்தத் தளம் தெரிவித்துள்ளது.

வடக்குக்கு புனரமைப்பும் பொருளாதார அபிவிருத்தியும் தேவை என்று அரசாங்கம் கூறிவருகின்றமை இந்தத் தேர்தலில் பொய்யாகிப் போனதாகக் கொழும்பு பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவர் சூசைப்பிள்ளை கீதபொன்கலன் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் தமது பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொடுக்கமுடியாது என்பது வடக்கு-கிழக்கு மக்களுக்குத் தெரியும் என்பதையும் தமிழர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தியே தமது வாக்குகளை அளித்துள்ளனர்.

இதேவேளை வடக்கு- கிழக்கில் அபிவிருத்தி என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வு முனைப்புடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்று நோர்வே பல்கலைக்கழகம் ஒன்றில் பணியாற்றும் இலங்கைத் தமிழரான என். சண்முகரட்ணம் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# புலம்பெயர் நாடுகளில் இலங்கையருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படுவதை தடுக்க கடும் முயற்சி

(கொழும்பு)

சட்டவிரோத குடியேற்றம் தொடர்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தோனேசியாவின் பாலிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் முரே மக்குல்லியுடனும் ஜீ.எல்.பீரிஸ் இருதரப்பு இச்சந்திப்பின்போது சட்டவிரோத குடியேற்றப் பிரச்சினை, பிராந்தியப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நோக்கிச் சென்றதாகக் கூறப்பட்ட இலங்கை அகதிகளைக் கொண்ட கப்பல் இந்தோனேசிய கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டது. இது இதற்கு முன்னர் கனடா நோக்கி சட்ட விரோதமாக குடியேற்றவாசிகள் சென்ற ஓசியன் லேடி மற்றும் சன் சீ கப்பல்களின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வளர்ச்சிக்கான தாக்கங்கள் குறித்து ஜீ.எல்.பீரிஸ் கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயர்டுடன் பாலியில் இடம்பெற்ற பிராந்திய நாடுகளின் மாநாட்டில் கலந்துரையாடியுள்ளார்.

சட்டவிரோத குடியேற்றம் தொடர்பாக அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின் ரூட்டுடனும் ஜீ.எல்.பீரிஸ் பேச்சு நடத்தியுள்ளார்.

அவுஸ்திரேலிய கடற்பரப்பை நோக்கிச் சென்ற ஓசியன் வைகிங் கப்பல் தொடர்புடைய விடயங்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் கையாண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் புகலிடம் கோரும் புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டபூர்வமான உரிமை கோரவில்லை. இவர்கள் வெறுமனே பொருளாதார அகதிகள் என்று மேற்கத்திய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் அண்மைய ஆய்வுகளை சுட்டிக்காட்டி ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார். (ஸ்ரீ-4)

# அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்வு

அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குதல் அல்லது தேவையற்ற சரத்துக்களை நீக்குதல் ஆகியன தொடர்பில் அமைச்சரவை கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால் அடுத்த மாதம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது என அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் அவசரகாலச் சட்டத்தின் தேவையற்ற சரத்துக்கள் நீக்கப்பட்டால் பாராளுமன்றில் யோசனைத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது.

இச்சட்டத்தை நீக்குதல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டின் 23 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டால் குறித்த தேர்தல் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம் வலுவற்றதாக மாறும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையை அதிகார சபையாக மாற்றும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மாநகரசபையை அதிகார சபையாக மாற்றுவதற்கு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் இந்த சட்டத் திருத்த யோசனைகளை சமர்ப்பிக்க சில மாத காலம் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றதுடன் அவசரகாலச் சட்டம் நீக்கப்படாத காரணத்தினால் ஐரோப்பிய ஒன்றியம் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தை இரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேநேரம் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென அமெரிக்காவும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கும் காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது


யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் நான்காவது ஆராய்ச்சி அமர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வளாக கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அமர்வில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்பும் பல்கலைக்கழக மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைக்கான சுருக்கமும் அதன் விரிவான சுருக்கமும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் அறிவித்துள்ளார்.

அத்தோடு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற துறைத்தலைவர்களின் வேலை நிறுத்தம் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய தொடர்பாடல் குறைபாடு காரணமாக இந்த நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## அமெரிக்காவில் கடும் பொருளாதார நெருக்கடி

# கடன் சுமையை உயர்த்த ஒபாமா முடிவு; குடியரசுக்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு



நாட்டின் கடன்சுமை வரம்பை உயர்த்தும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் குடியரசுக் கட்சி எம்.பி.க்களை சமாதானப்படுத்துங்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தமது நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் கடன் சுமை வரம்பை உயர்த்த ஒபாமா தலைமையிலான ஜனநாயக கட்சி அரசு முடிவெடுத்தது. ஆனால் இதற்கு எதிர்க்க்ட்சியான குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

கடந்த ஒரு வாரகாலமாக குடியரசுக் கட்சி எம்.பி.க்களை சமாதானப்படுத்த ஒபாமா அரசு எடுத்த நடவடிக்கை தோல்வியையே தழுவியது. இதையடுத்துத் தான் குடியரசுக் கட்சி எம்.பி.க்களை சமாதானப்படுத்த நாட்டு மக்களின் உதவியை உதவியை நாடியுள்ளார் ஜனாதிபதி ஒபாமா.

இது தொடர்பான ஜனாதிபதி ஒபாமா கடந்த திங்கட்கிழமை தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை வருமாறு,

அமெரிக்காவுக்கு தேசிய அளவில் மட்டு மல்ல சர்வதேச அளவிலும் நிறைய பொறுப்புகளும் கடமைகளும் உள்ளன. எந்த ஒரு சூழலிலும் இவற்றை நிறைவேற்ற வேண்டிய கட்டாய நிலையில் நாடு உள்ளது. நாடு இதுவ்ரை எப்பொழுதும் சந்தித்திராத நிதி சிக்கலை சந்தித்துள்ளது. இருப்பினும் இதனால் நாம் மனம் தளர்ந்திடக்கூடாது.

நாட்டின் நலன் கருதியும் நிதி சிக்கலுக்கு தீர்வு காணும் நோக்கிலும் சில நிதி சீர்திருத்தங்களை அரசு செய்து வருகின்றது. இவற்றில் ஒன்றுதான் கடன்சுமை வரம்பை உயர்த்தும் அரசின் முடிவு. ஆனால் அரசின் இந்த முடிவுக்கு குடியரசுக் கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதனால் இது தொடர்பான மசோதா நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சிக்கல் நீடிப்பதால் நிதி திரட்டுவதில் பிரச்சினை எழுந்துள்ளது. இதனால் அனைத்து விதமான சமூக, பொருளாதார திட்டங்கள் முடங்கிக் கிடக்கின்றன. நாட்டின் இப்போதைய நிதிச் சூழலில் கடன்சுமை வரம்பை உயர்த்தாமல் எதுவுமே செய்ய முடியாது.

இது குறித்து குடியரசுக் கட்சி எம்.பி.க்களுக்கு புரிய வைக்க எவ்வளவோ முயற்சி செய்தும் அவர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். கடன்சுமை வரம்பு உயர்வு கூடாது. அது தொடர்பான மசோதாவை எதிர்ப்போம் என்பதில் உடும்புப்பிடியாக உள்ளனர்.

நாடு மோசமான நிதி நெருக்கடியை சந்தித்து வருகிறது. இந்நிலைய தொடர்ந்தால் சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கு கூட நிதியை ஒதுக்க இயலாது. இது போன்ற நிலையால் அந்நிய முதலீட்டாளர்கள் கூட அமெரிக்காவில் முதலீடு செய்ய யோசிக்கும் நிலை ஏற்படலாம்.அப்படி ஒரு நிலைவந்தால் அது மோசமான விளைவை ஏற்படுத்தும். இதையெல்லாம் குடியரசுக் கட்சி எம்.பி.க்களுக்கு நீங்கள் தான் புரிய வைக்க வேண்டும். அவர்கள் பிடிவாதத்தை தளர்த்திக் கொள்ள நெருக்குதல் அளிக்க வேண்டும். நாட்டின் நலனை கருத்தில் கொண்டு நீங்கள் இதைச் செய்ய வேண்டும். இதை உங்களால் செய்ய இயலும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என்றார் ஜனாதிபதி ஒபாமா. (ஸ்ரீ-4)




## ஆபிரிக்க நாடுகளுக்கு ரூ.2,300கோடி நிதியுதவி

### உலகவங்கி வழங்குகிறது

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சோமாலியா,எதியோப்பியா, கென்யா உள்ளிட்ட நாடுகளில் கடும் வறட்சி காணப்படுகின்றது. மேலும் தீவிரவாதிகளின் அட்டகாசம் அதிகமாக உள்ள சோமாலியாவில் 22 இலட்சம் மக்கள் பட்டினியால் அவதிப்படுகின்றனர். ஐ.நா.உலக உணவுத் திட்டத்தின் கீழ் அவர்கள் அனைவருக்கும் உதவி செய்ய முடியாத நிலை உள்ளது.

எனவே அந்த நாடுகளுக்கு உதவி செய்வதற்காக உலக வங்கியின் அவரச கூட்டம் நடைபெற்றது. அப்போது கிழக்கு ஆபிரிக்க நாடுகளுக்கு ரூ2,300 கோடி நிதியுதவி வழங்க முடிவு செய்யப்பட்டது. நிவாரணம் மற்றும் மீட்பு பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் பசியால் மக்கள் வாடுவதை தடுக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் உலக வங்கி தலைவர் ரொபேர்ட் ஜோலிக் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# நோர்வே இரட்டைத் தாக்குதல் குற்றவாளிக்கு மனநிலை பாதிப்பு

## அவரது சட்டத்தரணி தெரிவிப்பு

(ஒஸ்லோ)

நோர்வே இரட்டைத் தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளி ஆண்டர்ஸ் பேரிங் ப்ரீவிக் (வயது 32) மனநிலை சரியில்லாதவராக இருக்கலாம் என அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

நோர்வேயில் சமீபத்தில் நடந்த இரட்டைத் தாக்குதலில் தொடர்புடைய குற்றவாளி ப்ரீவீக் பிடிபட்டார். இத்தாக்குதல் ஐரோப்பாவைக் காப்பாற்ற நடத்தப்பட்டதாகவும் தான் மட்டுமே இச் செயலில் ஈடுபட்டதாகவும் விசாரணையின் போது கூறினார். இந்நிலையில் அவரது வழக்கறிஞர் கெய்ர் லிபிஸ்டாடு இது குறித்து நேற்று முன்தினம் கூறியதாவது,

ஒட்டுமொத்த சம்பவங்களையும் ப்ரீவிக் அளித்த வாக்குமூலத்தையும் பார்க்கும் போது அவர் சிறிது மனநிலை சரியில்லாதவராக இருக்கக்கூடும் என நான் கருதுகிறேன்.

இருப்பினும் விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. அவர் தான் ஒரு போரில் ஈடுபட்டதாகவும் அந்தப் போர் 60 ஆண்டுகளுக்குள் முடிந்து விடும் எனவும் அவர் கற்பனை செய்து கொண்டிருக்கிறார். விரைவில் அவர் குறித்த மருத்துவ அறிக்கை அவரது மனநிலையை விளக்கிவிடும் என நம்புகிறேன்.

இத்தாக்குதலில் ஈடுபடுவதற்கு முன் அவர் சில போதைமருந்துகளைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு லிபிஸ்டாடு தெரிவித்தார். அண்மையில் நீதிமன்றில் ஆஜரான ப்ரீவிக் தான் ஒரு பயங்கரவாதக் குழுவுடன் இணைந்து செயற்பட்டதாகவும் அது போல மேலும் இரு பயங்கரவாதக் குழுக்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.




ஆனல் பொலிஸார் அவரது இந்த வாக்குமூலம் குறித்து சந்தேகம் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

இதை நாம் இப்போதைக்கு உறுதிப்படுத்த முடியாது.அதே நேரம் அதற்கான வாய்ப்பே இல்லை என்றும் கூறிவிட முடியாது என்றார். இரட்டைத் தாக்குதலைத் தொடர்ந்து துரிதமாகச் செயற்பட்டு குற்றவாளியைப் பிடித்ததற்காக நோர்வே நீதித்துறை அமைச்சர் பொலிஸாரைப் பாராட்டியுள்ளார்.

இரட்டைத் தாக்குதலில் பலியானோரின் பட்டியலை நேற்று முன்தினம் பொலிஸார் வெளியிட்டனர். இதற்கிடையில் நேற்றுமுன்னம் ஒஸ்லோவில் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கூடி இரட்டைத் தாக்குதலில் பலியானோருக்கு மலர் அஞ்சலி செலுத்தினர். (ஸ்ரீ-4)



மலேசியா வந்துள்ள வடகொரியா வெளியுறவுத்துறை அமைச்சர் பாக் உய் சுன் (இடது) புத்ரஜயா நகரில் மலேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் அனிபா அமானை சந்தித்துப் பேசினார்.

# விமானம் மலையில் மோதி 78 பேர் பலி

## மொராக்கோவில் சம்பவம்

(மொறாக்கோ)

மோசமான வானிலை காரணமாக மொராக்கோவில் இராணுவ விமானம் மலைப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 78 பேர் பரிதாபமாக பலியாகினர். 3 பேர் காயங்களுடன் உயிர் தப்பினர். மொராக்கோவின் சி-130 ரக இராணுவ விமானம் நேற்று முன்தினம் டஹலாவில் இருந்து கினித்ரா நோக்கிச் சென்றது.

அதில் 60 இராணுவ வீரர்கள் மற்றும் 9 விமான ஊழியர்கள் உட்பட 81 பேர் பயணித்தனர். விமானம் ஜியூல்மின் நகரின் 10 கிலோ மீற்றர் தொலைவில் அடர்ந்த மலைப் பகுதியில் சென்ற போது மோசமான வானிலை, அதனால் ஏற்பட்ட மூடுபனி காரணமாக கீழே விழுந்து விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

இந்த விபத்தில் 78 பேர் பலியாகினர். பலத்த காயங்களுடன் 3 பேர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர். விபத்து குறித்து தீவிர விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொராக்கோவில் இதுவரை நடந்த விமான விபத்துக்களிலேயே அதிக உயிர் இழப்பும் மோசமான விபத்தும் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக கடந்த 1994 ஆம் ஆண்டில் நடந்த விமான விபத்தில் 44 பேர் பலியாகினர். (ஸ்ரீ-4)

# நேட்டோ படையினரின் தாக்குதலில் 35 பாகிஸ்தான் தலிபான்கள் பலி

நேட்டோ படையினர் நடத்திய தாக்குதல்களில் 35 பாகிஸ்தான் தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானின் பக்டியா மாகாணத்தின் ஊடாக ஊடுருவி கூட்டுப் படையினர் மீது தாக்குதல் நடத்த முயற்சித்ததாகவும் இதன் போது நேட்டோ படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் குறிப்பிடப்படுகின்றது.


காயமடைந்தவர்கள் பாகிஸ்தானுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் வசிரிஸ்டான் மாநில தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா கடுமையான தாக்குதல்களை நடத்திய வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வசிரிஸ்டான் மாநிலத்தின் முன்னணி தீவிரவாதத் தலைவர்களான ஹாபீஸ் குல் பஹதூர் மற்றும் முல்லாஹ் நசீர் ஆகியோரின் சகாக்களே தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# பொலிஸ் மற்றும் முப்படையினரைத் தவிர வேறெவருக்கும் ஆயுதமேந்த அனுமதியில்லை

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

பொலிஸார் மற்றும் முப்படையைச் சேர்ந்தவர்களைத் தவிர்ந்த வேறு எந்தத் தரப்பினருக்கும் ஆயுதமேந்த அனுமதி அளிக்கப்படவில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய தரப்பினரும் ஆயுதம் வைத்திருக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பின்னணி மற்றும் ஏனைய காரணிகளை கருத்திற் கொள்ளாது சட்ட விரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தாம் உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆயுத பாவனை தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலி உறுப்பினர்களிடமும் விசாரணை நடத்தப்பட்டு வருதாகவும் சட்டவிரோத ஆயுதங்களை பயன்படுத்துவோர் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு தேர்தல்களின் போது இராணுவத்தினர் எவ்வித தலையீடுகளையும் செய்யவில்லை எனவும் சில வங்குரோத்து அடைந்த அரசியல்வாதிகள் இவ்வாறான போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் தலையீடு செய்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பாரியளவில் வெற்றியீட்டியிருக்க முடியாது எனவும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கிய காலத்தில் வடக்கு-கிழக்கு தேர்தல்களின் போது எவ்வாறான தாக்கம் காணப்பட்டது என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு தலையீடு செய்தனர் என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கும் பலர் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் குரல் கொடுக்கத் தவறியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சனல் 4 ஊடகத்தின் ஆவணப்படத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக தீர்மானிப்பது முட்டாளதனமானது எனவும் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திப் பணிகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் டேவிற் வீதியில் நின்றிருந்த இளைஞன் மீது வேகமாக வந்த ஆட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை 4 மணிக்கு டேவிற் வீதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த த.தயாபரன் (வயது 26) என்ற இளைஞனே படுகாயத்திற்கு உள்ளானவராவார். (ஸ்ரீ-4)

# உயர்தரப்பரீட்சை அனுமதிப்பத்திர விநியோகப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

இம்முறை கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையார் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தள்ளார்.

குறித்த பரீட்சைக்கான பாடசாலை மட்ட விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது பாடசாலைக்கும் தனியார் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களது சொந்த விலாசத்திற்கும் இவ் அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளதாவது, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 94 ஆயிரம் பேர் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 2 இலட்சத்து 4 ஆயிரம் பேர் பாடசாலை மட்ட பரீட்சார்த்திகளாவர். ஏனையோர் தனியார் பரீட்சாத்திகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# கனடாவில் தமிழ் வர்த்தகர் ஒருவர் குத்திக் கொலை

(கொழும்பு)

க்னடாவிலுள்ள பிரபல தமிழ் வர்த்தகர் ஒருவர் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் மொன்ரியாலில் வசித்துவந்த சுந்தரம் யோகராஜா(வயது64) என்பவரே கடந்த புதன்கிழமை குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சுந்தரம் யோகராஜாவின் இறுதிச் சடங்கு கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போது பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் கலந்து கொண்டு அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

பாரியளவிலான முதலீடுகளை மேற்கொண்டு கடின உழைப்பில் ஈடுபடுபவர்களுக்கு அவர் ஒரு முன் உதாரணமானவர். முதலில் கனடாவில் வர்த்தகத்தை ஆரம்பித்தவர் பின்னர் குடும்பத்தினருடன் இங்கு வாழ்ந்து வருகின்றாரென தெற்காசிய நாடுகளின் பெண்கள் சமூக நிலை உறுப்பினர் ரமணி பாலேந்திரா கூறியுள்ளார்.

சுந்தரம் யோகராஜா வீட்டிற்கு அருகிலிருந்தே குப்பைகளை அகற்றுவது குறித்து அயலவரான மானுவல் மார்டினெஷ் (வயது 58) என்பவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்தே மானுவல் யோகராஜாவைக் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மானுவலைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்திருப்பதுடன் இச்சம்பவம் தொடர்பாக அவர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளார். (ஸ்ரீ-4)

# கனகராயன் குளத்தில் விதைஉற்பத்திப் பண்ணை

உலக வங்கியின் நிதி உதவியுடன் கனகராயன்குளத்தில் 200 ஏக்கர் காணியில் விதைகள் உற்பத்திப்பண்ணை ஆரம்பிக்கப்பட வுள்ளது.இதற்குரிய அனைத்து பணிகளும் நிறைவடைந்துள்ளது என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரி வித்தார்.

அதேநேரத்தில் நயினாமடுவில் 200 ஏக்கரில் உயர்தர கால்நடை உற்பத்தி நிலையம் அமைக்க தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு உலக வங்கி நிதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்.

இரண்டு திட்டங்களும் நிறைவேறும் பட்சத்தில் பிரதேசத்தைச் சேர்ந்த பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சாத்தியங்கள் உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வடபிராந்திய அலுவலகம் எதிர்வரும் முதலாம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் திறந்துவைக்கப்படும் என அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் பி.எம்.எஸ்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவே தனியார் பஸ்களுக்கான வீதி வழி அனுமதிப் பத்திரங்களை வழங்கிவருகின்றது. (ஸ்ரீ-4)

# கோல்டன் கீ ஊழல் மோசடி; லலித் கொத்தலாவலவுக்கு பிணை

(கொழும்பு)

கோல்டன் கீ ஊழல் மோசடி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவல 5 மில்லியன் ரூபா ரொக்கப் பிணையில் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

கோல்டன் கீ ஊழல் மோசடி தொடர்பில் செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவல உட்பட 7 பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு நீதிமன்றத்தினால் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை 6 ஆவது சந்தேக நபரான சிசிலாயா கொத்தலாவலவை கைது செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜேயசுந்தர பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளார். (ஸ்ரீ-4)

# புலிகளில் பெரும்பாலானோர் வட-கிழக்கில் பதுங்கியுள்ளனர்

## புனர்வாழ்வு ஆணையாளர் சந்தேகம்

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாத விடுதலைப்புலிகளின் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் மறைந்து வாழக்கூடும் என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறானவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அவர்கள் இராணுவ முகாம்களில் சரணடைய வேண்டும் என கேட்டுக்கொள்வதாகவும் ரணசிங்க கூறியுள்ளார்.

வன்னி இராணுவ நடவடிக்கையின் பின்னர் அரசாங்கத்திடம் சரணடைந்த முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலர் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். எனினும் கிழக்கு இராணுவ நடவடிக்கையின் பின்னர் எவரும் சரணடையவில்லை எனவும் ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

வன்னி இராணுவ நடவடிக்கையின் பின்னர் 11 ஆயிரத்து 696 விடுதலைப்புலி உறுப்பினர்கள் சரணடைந்தனர். இவர்களில் சுமார் 80,ஆயிரம் பேர் வரை சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும் 2 ஆயிரத்து 700 பேர் வடக்கில் உள்ள 6 முகாம்களில் புனர்வாழ்வு பயிற்சிக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

மேலும் சரணடையாது மறைந்து வாழும் புலிகளின் உறுப்பினர்கள் சரணடையும் பட்சத்தில் அவர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டு புனர்வாழ்வு பயிற்சிகளின் பின்னர் சிறந்த வாழ்க்கை வாழ்வதற்கான சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கும் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# வவுனியா இராசேந்திரன்குளம் பகுதியில் ஆடை உற்பத்தி தொழிற்சாலை

## நாளை அடிக்கல் நாட்டும்விழா

(கொழும்பு)

வவுனியாவில் ஆடை உற்பத்தித் தொழிற்சாலையொன்று அமைக்கப்படவுள்ளதுடன் அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஒமேகா லைன் ஆடை உற்பத்தி தொழிற்சாலை வவுனியா இராசேந்திரன் குளம் பகுதியில் தொழிற்சாலைஒன்றைஅமைக்கஉள்ளது.

இதேவேளை ஒரிட் காமண்ட் உற்பத்தி நிறுவனத்திற்கும் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக சுமார் 12 ஏக்கர் காணி பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாக அரச அதிபர் பீ.எம்.எஸ்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்த தொழிற்சாலைகள் மூலம் சுமார் 1000 இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-4)







யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர்களுக்கான புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினை நிர்மாணிப்பதற்கான நடைபவனி நேற்று முடிபடைந்தது. இதில் பங்குபற்றியவர்களுக்கான கௌரவிப்பு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பங்குபற்றியவர்களுக்கு விருதினை வழங்குவதையும் நடைபவனியின் ஏற்பாட்டாளர் நா. சிவகணநாதன் சரிந்த உடனம்புவ ஆகியோரால் புற்றுநோய் நிலையம் அமைப்பதற்கான பொறுப்பை வட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன், வைத்திய கலாநிதி ஜெயக்குமார் ஆகியோரிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி

# வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

முல்லைதீவு, வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ். வலயக்கல்வி பணிமனை முன்பாக நேற்று காலை 11 மணிக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது வடமாகாணகல்வி பண்பாட்டு விளையாட்டுதுறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில், 10 வருடத்திற்கு மேலாக கடமையாற்றி எமக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. இது எமக்கு வேதனையைத் தருகின்றது. யுத்தம் முடிவடைந்து இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்ட இன்றைய காலகட்டத்திலும் எமக்குரிய நியமனம் வழங்கப்படவில்லை.

அத்தோடு எங்களுக்கோ கடின உழைப்பு எமது நியமனத்திற்கேன் ஏன் இழுத்தடிப்பு, ஆசிரியர் என்று சமூகம் தந்த கௌரவத்தை நியமனம் தந்து காப்பாற்றுங்கள் என வாசகங்களையும் கையில் ஏந்தி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 4 ஆம் திகதி இதே இடத்தில் கிளிநொச்சி வலய தொண்டர் ஆசிரியர்கள் கவயீர்ப்பு பேரணியை நடத்தியதோடு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை வட பிராந்திய பொறியியலாளர் சங்கமும் இணைந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியல்பீடம் நிறுவுவதற்கான வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடலொன்றை நடாத்தவுள்ளது.

இக்கலந்துரையாடல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு பருத்தித்துறை வீதி நல்லூரிலுள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொறியியலாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

## மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் ஆயிரத்து 300 பேரை புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான மேல் மாகாண பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் பட்டதாரிகளுக்கு மேல் மாகாணத்தில் பதவி வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகளுக்கான நியமனங்களை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் தமிழ்மொழி மூலமான 400 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமை தெரியவந்துள்ள்தாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)

## உயர்தர மாணவர்களுக்கு இலவச பஸ் சேவை

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தனியார் பேருந்துகளில் இலவசமாக பயணிக்கலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் 8 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 3 ஆம் திகதி வரை மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதிப்பத்திரங்களை காண்பிப்பதன் மூலம் இலவசமாக பயணிக்கலாம் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கீடந்த வருடம் இத்திட்டமானது மேல் மாகாணத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டதாகவும் இம்முறை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

## மாவைக்கந்தனின் தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை கண்டகி சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)



## Calling for Tender- Teaching Hospital, Jaffna

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00am on 15.08.2011. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 01.08.2011 on payment on non refundable deposit.

| No. | Nature of Work | Grade | Non Refundable Deposit |
|---|---|---|---|
| 01. | Repairs of Dental Clinic roof | C9 | Rs 1,000 |
| 02. | Renovation of SHO Quarters Male toilet stage 1 | C8 | Rs 1,500 |
| 03. | Renovation of SHO Quarters tiling Work. Male site- stage 2 | C8 | Rs 1,500 |
| 04. | Renovation of SHO Quarters Male site Aluminum, Electrical & Roofing Work. stage 3 | C9 | Rs 1,000 |
| 05. | Renovation of SHO Quarters Male site painting Work- stage 4 | C9 | Rs 1,000 |
| 06. | Renovation of SHO Quarters Female toilet -stage 1 | C9 | Rs 1,000 |
| 07. | Renovation of SHO Quarters Female site tilling Work - stage 2 | C8 | Rs 1,500 |
| 08. | Renovation of SHO Quarters Female site Aluminum, Electrical & Roofing Work- stage 3 | C9 | Rs 1,000 |

02. Tenders will be opened immediately after closing, at the office of the Director, Teaching, Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

03. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "C8"/ C9 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tenders may be dispatched either by registered post or be hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 15.08.2011.

05. Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**

(C-3857)

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.
-கிரீஸ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தார்மீகப் பொறுப்பு என்ன?

தமிழர் பகுதிகளில் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியடைந் தமைக்கான காரண காரியங்கள் பற்றி ஆராய்ந்த நாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைந்த மகத்தான வெற்றியின் தாற்பரியம் குறித்தும் ஆராய்வது தக்கார் தொழில் பாற்படும்.

அவ்வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைந்துகொண்ட மகத்தான வெற்றி என்பது அந்தக் கட்சிக்கான வெற்றியன்று.

மாறாக தமிழ் மக்கள் தம் இனத்திற்கு ஈனம் இழைத்த ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிக்க முடிவு செய்தனர்.

அப்படியானால், யாருக்கு வாக்களிப்பது என்ற கேள்வி எழுகின்றது. இங்குதான் தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் உள்ளிட்ட தமிழ்த் தலைவர்கள் பலரின் தியாகமும் அறிவியலும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி முன்னெழுகிறது.

தமிழரசுக் கட்சி ஒரு நல்ல நோக்கில், கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழர்களின் உரிமை பற்றி கதைப்பதற்கான கட்சி என்பதாக உருவகமமைக் கப்பட்டதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதே ஒரே வழி யென்ற முடிபைத் தமிழ் மக்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

தமிழ் மக்களின் இத் தீர்மானத்தில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக் காக, தியாக சிந்தனையோடு, உணர்வுபூர்வமாகச் செயற்படுகின்றது என பொருள் கொள்வது மகாதவறு.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு தடியை வேட்பாளராக நிறுத்தி அதற்குக்கீழ் தமிழரசுக் கட்சி(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) என்று எழுதப்பட்டிருந்தால் அதற்கு தங்களின் வாக்கை அளித்திருப்பார்கள்.

எனவே நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளில் இருந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் நேர்மையானவர்கள், அவர்கள் எவரிடமும் பதவியாசை, சுய நலம் எதுவும் இல்லை, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அத்தனை பேரும் உத்தமர்கள். இப்படியானதொரு முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருக்கும் எவரும் தயவு செய்து எடுத்துவிடக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் அரச பக்கம் சார்ந்து நிற்போர், அரசுக்காகக் குரல் கொடுப்போர், வடக்கில் ஒன்று தெற்கில் இன்னொன்று என்று வாலையும் தலையையும் காட்டுவோர் எனப் பலர் இருக்கின்றனர்.


தமிழ் மக்களின் எத்தனையோ பிரச்சினைகளை சுட்டிக் காட்டவேண்டிய நிலைமைகள் இருந்தும் சின்னத்தனமான அரசியல் நடத்தும் சிறுமைத்தனங்களும் கூட்டமைப்பில் இல்லாமல் இல்லை. இத்தனையிருந்தும் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழர்களின் உரிமைக்காக போராடியவர்கள் அல்லர். இவர்களின் கோரிக்கைக்காக அரசு எந்தவிதமான தீர்வையும் தரப்போவதும் இல்லை. மாறாக வன்னியிலும் அதற்கு முன்பும் உயிரிழந்தவர்களின் தியாகமும் அதனூடான சர்வதேசத்தின் அழுத்தமுமே எமக்கான தீர்வைப் பெற்றுத்தரும்.

எனவே எங்கள் இனத்தின் குருதி நனைந்த மண்ணில் நின்று கொண்டு அரசே! எதையாவது தா! நாங்கள் பெற்றுக்கொள்வோம் என்ற மிக மோசமான செயலை மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்யாதிருந்தால் அதுபோதும்.

# அரசுடனான பேச்சு மூலம் நல்லதீர்வு கிடைக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை



(கொழும்பு)

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஆக்க பூர்வமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பதை நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத்தேர்தல் முடிவுகள் மீண்டும் வலியுறுத்தியிருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் அது தமிழ் தேசியக் கூட்டமைப்புடனேயே நடத்தப்பட வேண்டும் என்ற செய்தியையும் இந்தத் தேர்தல் முடிபு தெளிவாக்கியுள்ளது.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளின் மூலம் ஆக்கபூர்வமான தீர்வொன்று எட்டப்பட வேண்டும் என்பது மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர், வடக்கு கிழக்கில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தன்னிகரற்ற ஆதரவை வழங்கியுள்ளனர்.

தமிழர்களின் ஏகோபித்த கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற செய்தியை மக்கள் இத்தேர்தல் மூலம் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றும் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இடம் பெறும் பேச்சுவார்த்தைகள் வெறுமனே காலத்தை இழுத்தடிக்கும் செயற்பாடாக அல்லாமல் ஆக்கபூர்வமான தீர்வொன்றைப் பெறும் முயற்சியாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றும் செல்வம் அடைக்கல நாதன் மேலும் தெரிவித்தார். (எ-8)

# உயர்தரப் பரீட்சை மாணவருக்கு இலவச பஸ் சவாரி இல்லை

க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து சேவையை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ள போதும் தம்மால் இவ்வாறானதொரு சேவையை வழங்க முடியாது என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று தெரிவித்தது.

இதேவேளை இவ்வாறான தீர்மானம் பற்றி தம்மோடு கலந்துரையாடப்படவில்லை எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டது.

உயர்தர பரீட்சைக்கு செல்லும் மாணவர்களுக்கு ஓகஸ்ட் 8ஆம் திகதி தொடக்கம் செப்டம்பர் 3ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இலவச பஸ் சேவை வழங்கப்படும் என கல்வி அமைச்சர்பந்துலகுணவர்த்தனஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

க.பொ.த (உ/த) பரீட்சைக்கான அடையாள அட்டையை காட்டுவதன் மூலம் மாணவர்கள் இந்த இலவச பயணத்தை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

இப்படியான தெளிவில்லாத அறிக்கைகளை அமைச்சர் வெளியிட கூடாது. இதனால் மாணவர்கள் மனக்கிலேசத்திற்கு சங்கடமான நிலைக்கும் ஆளாவார்கள் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் கெமுனு விஜயரத்தன தெரிவித்தார். (முன்னர்வந்த செய்தி 16ஆம் பக்கத்தில்) (ச-8)

# விளையாட்டு அணிகளுக்கான புகைப்படம் எடுத்தல்

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டுக்கான யாழ்.பல்கலைக்கழக அனைத்து விளையாட்டு அணிகளுக்குமான புகைப்படங்களை நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுக்கத்தீர்மானித்திருப்பதால் பல்கலைக்கழக விளையாட்டு அணி உறுப்பினர்கள் அனைவரும் இந்நிகழ்விற்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை வேண்டிக்கொள்கின்றது. (எ)

# குமுழமுனையில் ஒரு தொகை வெடி பொருட்கள் மீட்பு

முல்லைத்தீவு-குமுழமுனை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டதிடீர் சோதனை நடவடிக்கைகளின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முல்லைத்தீவு முகாம் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவற்றில் 6 ஆயிரத்து 900கும் அதிகமான 7.62 மில்லி மீற்றர் ரக துப்பாக்கி ரவைகள், 15 கைக் குண்டுகள், ஐந்து ஆர்.பி.ஜி. ரவைகள், 60 மில்லி மீற்றர்ரக 12 மோட்டார்ரவைகள், 10 கிலோக் கிராம் எடைகொண்ட கண்ணி வெடி ஒன்றும் அடங்குகின்றன.

இந்த வெடிபொருட்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தமது எதிர்கால தேவைக்காக மறைத்து வைத்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# காலியில் ரின்மீன் தொழிற்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை

காலியில் ரின்மீன் உற்பத்திக்கான தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கடற்தொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தியமைச்சில் நேற்று கைச்சாத் திடப்பட்டது.

இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் மற்றும் ஹெபி குக் லங்கா பூட்ஸ் தனியார் நிறுவனம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஒரு வருட காலத்திற்கான இந்த ஒப்பந்தத்தின் படி ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டு 90 நாட்களுக்குள் இவ் விரு நிறுவனங்களும் இணைந்து உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்காக ஹெபி குக் லங்கா பூட்ஸ் தனியார் நிறுவனம் 84 மில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளது. நாள்ஒன்றுக்கு 10 ஆயிரம் ரின்மீன்களை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் இலட்சினையுடன் சந்தைப்படுத்தப்படவுள்ள இந்த ரின்மீன்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உற்பத்திகளை விடவும் குறைந்த விலையில் விற்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# மீட்டல் வகுப்புகள்


(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப் ளோமா கற்கைநெறி தரம் 2 (2010/2011) இற்கான பரீட்சைகள் புரட்டாதி மாதத்தில் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புகள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் இம் மாதம் 31 ஆம் திகதி யும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6,7 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளது.

எனவே இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் அனைத்து மாணவர்களும் தவறாறு சமுகமளிக்குமாறு இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)


# சத்திய தரிசனம்



## பிறரைத் தவறாகப் பேசாதே

சொர்க்கத்தை நாம் தேடிப் போக வேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உயிர்களிடம் காட்டும் இரக்கம் இவற்றினால் நம்முடைய மனத்துக்கு கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம். பகவானிடம் மனப் பூர்வமாக நம்மிடமுள்ள அனைத்தையும் சமர்ப்பித்து பிரார்த்திக்க வேண்டும்.தண்ணீர் வேண்டும் என்ற விருப்பம் இருந்தால் மட்டும் தாகம் தீராது .கையில் தண்ணீரை எடுத்துப் பருகிய பின்னர் தாகம் தீருகிறது. பிரம்மாவின் பிரதிபலிப்பே தாய், விஷ்ணுவின் மறுவடிவமே தந்தை. சிவபெருமான் நம்மை வழி நடத்தும் ஆசிரியர் ஆகையால் மும்மூர்த்திகளும் நம் வாழ்விலேயே உடன் இருக்கின்றனர். பிறரைக் குறித்து தவறாகப் பேசாதே. இவர்களிடம் உள்ள நல்ல பண்புகளை பார். அனைவரும் நல்லவர்கள் தான். உன் கண்களுக்கு அவர்களிடம் உள்ள தீய பண்புகள் தெரிந்தால் அதற்கு உன்னிடமுள்ள தீமைதான் காரணம். உனக்கு பிடிக்கவில்லையென்றால் அவர்களுடன் பழகாமல் ஒதுங்கிவிடு.

# இந்தியாவுடன் பேச்சுநடத்த பாக். வெளியுறவு அமைச்சர் வருகை



இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹினா ரப்பாணி நேற்று முன்தினம் டில்லி வந்தடைந்தார். அவரை பாகிஸ்தானுக்கான இந்திய தூதர்சரத் சபர்வால் அங்குள்ள இந்திய தூதரகத்தின் இணைச் செயலாளர் வை.கே. சின்கா இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் சாகித்மாலிக் மற்றும் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஹினா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் என்ற முறையில் நான் இந்தியா வருவது முதல் முறை ஆகும். பாகிஸ்தான் மக்கள் மற்றும் பாகிஸ்தான் அரசின் நல்வாழ்த்துக்களை நான் கொண்டு வந்து இருக்கிறேன். அண்டை நாடுகளாக இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புறவை மேம்படுத்தும் வகையில் முன்னோக்கி செல்ல முடியும் என்று நம்புகிறேன். இந்த பிராந்தியத்தில் இரு நாடுகளும் தங்கள் பொறுப்புணர்ச்சியை உணர்ந்து செயற்படும் என்றும் கருதுகின்றேன் என்றார். இந்த பேச்சுவார்த்தைக்கு முன்னோட்டமாக இந்திய வெளியுறவுத்துறை செயலர் நிருபமா ராவும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளருமான சல்மான் பஷிரும் நேற்று முன்தினம் டில்லியில் சந்தித்து கலந்து ரையாடினர். (ஸ்ரீ-4)

# மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவ தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம்

## சோனியாகாந்தி தெரிவிப்பு

(டாக்கா)

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு உதவுவதில் தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று சோனியாகாந்தி கூறினார்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சர்வதேச மாநாடு வங்கதேசத் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. பிரதமர் ஷேக் ஹசீனா மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இம் மாநாட்டை காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி தொடக்கிவைத்து மேலும் உரையாற்றுகையில், சிறுகடனுதவி, கல்வி, மகளிர் முன்னேற்றம், பொது சுகாதாரம் ஆகியவற்றில் வங்கதேசத்தின் முன்முயற்சி பாராட்டத்தக்கது. மற்ற நாடுகளுக்கு இந்நாடு வழிகாட்டியாக உள்ளது.

அறிவுத்திறன் குறைவு நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஏராளமான குழந்தைகளுக்கு உதவுவதில் தெற்காசிய பிராந்திய நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் தேவையான ஒன்றாகும். அப்போதுதான் அந்நோயை குணமாக்க அனைவராலும் செலவு செய்ய முடியும்.

இந்த நோயை எதிர்கொள்ளும் விதமாக மூன்று விடயங்களை நாம் கையாள்வது அவசியம். நோய் பாதித்த குழந்தைகளின் பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல், இந்த வகை குழந்தைகள் குறித்து அனைவர் மத்தியிலும் போதிய விளக்கம் அளித்தல், இதற்கான ஆராய்ச்சி மையங்களை ஏற்படுத்துதல் ஆகியவை பல ஆண்டுகளாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டாலும் இந்நோய்க்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. எனவே இதை எதிர்த்துப் போராடுவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இதற்கு சரியான சிகிச்சை முறைகளும் இல்லாத நிலையில் சர்வதேச சமுதாயத்தின் துணை மிகவும் அவசியம் என்றார். (ஸ்ரீ-4)

# ஸ்பெக்ட்ரம் ஊழலில் எந்தவித தொடர்புமில்லை

## தொலைத்தொடர்புத்துறை முன்னாள் செயலர் தெரிவிப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான வழக்கு விசாரணை டில்லி சி.பி.ஐ நீதிமன்றில் நீதிபதி சைனி முன்னிலையில் நடந்து வருகிறது. கடந்த 2 நாட்களாக இந்த விசாரணையில் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா ஆஜராகி வாதாடினார்.

பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் நிதி மந்திரி ப.சிதம்பரத்துக்கும் தெரிந்தே ஸ்பெக்ட்ரம் உரிமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன என்றார். எனவே ஸ்பெக்ட்ரம் வழக்கில் ப.சிதம்பரத்தை சாட்சியாக சேர்க்க வேண்டும் என்று ஆ.ராசா கோரிக்கை விடுத்தார்.

ஆ.ராசாவின் வாதம் முடிந்த நிலையில் நேற்று தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலாளர் சித்தார்த்பெகுரா தன் தரப்பு வாதங்களை கூறினார். அவர் சார்பில் சி.பி.ஐ நீதிமன்றில் மூத்த வழக்கறிஞர் அமன் லெஜி ஆஜராகி வாதாடினார்.

அவர் கூறுகையில், சித்தார்த் பெகுரா மத்திய அரசு ஊழியராக பணியாற்றியவர். அவர் எந்த தவறும் செய்யவில்லை. ஸ்பெக்ட்ரமில் அவர் முறைகேடுகள் செய்ததாக எந்த ஆதாரமும் இல்லை.

தொலைத் தொடர்பு துறை செயலாளராக இருந்த சித்தார்த்பெகுரா அரசின் கொள்கைகளைத்தான் அமுல்படுத்தினார். ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கும் அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அரசின் கொள்கைகளைத் தான் அமுல் படுத்தினார். ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு அவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அரசின் கொள்கையை அமுல்படுத்துவதை எப்படி தவறு என்று சொல்ல முடியும்? சொல்ல முடியாது. மேலும் குறிப்பிட்ட இந்த கொள்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட பல கருத்துக்கள் உள்ளன. எனவே பெகுரா நிரபராதி என்றார்.

சித்தார்த் பெகுரா கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் மீது கிரிமினல், சதி, ஏமாற்றுதல், ஆவணங்களை திருத்தி மோசடி செய்தல் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

## கறுப்புப்பண விபரத்தை இந்தியாவுக்கு —அளிக்க சுவிற்சர்லாந்து முடிவு—

(புதுடில்லி)

தங்கள் நாட்டு வங்கிகளில் இந்தியர்கள் வைப்புசெய்துள்ள கறுப்புப் பணம் பற்றிய விபரத்தைஅளிக்க சுவிற்சர்லாந்து முன்வந்துள்ளது. இரு நாடுகளிடையே மேற்கொள்ள உள்ள திருத்தப்பட்ட ஒப்பந்தம் இதற்கு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில், மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி இத்தகவலைத் தெரிவித்தார். புதிய ஒப்பந்தம் மூலம் இந்தியர்கள் சுவிஸ் வங்கியில் வைப்பிலிட்டுள்ள கறுப்புப் பண விபரம் பற்றிய தகவல்கள் கிடைக்கும். இந்த விபரம் இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைக்கும் என பிரணாப் நம்பிக்கை தெரிவித்தார்.

புதிய ஒப்பந்தம் குறித்து அனைத்து நடைமுறைகளும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதிக்குள் இறுதி செய்யப்படும் என்று இந்தியாவுக்கான சுவிட்ஸர்லாந்து தூதர் பிலிப் வெல்டி தெரிவித்தார். ஒக்டோபர் 7 ஆம் திகதியிலிருந்து கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் பற்றிய விபரத்தை இந்தியாவுக்கு சுவிற்சர்லாந்து அளிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தியர்கள் வெளிநாட்டு வங்கிகளில் போட்டுள்ள கறுப்புப் பணத்தை கொண்டுவர வேண்டும் என்ற கோஷம் சமீபகாலமாக வலுத்து வருகிறது. அதிலும் கறுப்புப் பணம் என்றாலே சுவிற்சர்லாந்து வங்கிகள்தான் நினைவுக்கு வருகிறது. அதற்குக் காரணமே அந்த நாட்டு வங்கிகள் பணம் வைத்துள்ள வாடிக்கையாளர்களின் பெயர்களை அந்நாட்டு அரசு வங்கிகள் வெளியிடாததுதான். இரகசியம் காக்கப்படுவதால் அரசியல்வாதிகள், பெரும் பணக்காரர்கள் வரி செலுத்தாமல் சேர்த்த கறுப்புப் பணத்தை சுவிஸ் வங்கிகளில் பதுக்கிவைத்துள்ளனர்.

இப்போது இவர்களது பெயர் விபரமும் வெளியாக உள்ளது. (ஸ்ரீ-4)

# கலாநிதிமாறனுக்கு பொலிஸார் —மீண்டும் அழைப்பாணை—

சேலத்தை சேர்ந்த சினிமா விநியோகஸ்தர் செல்வராஜா தீராத விளையாட்டு பிள்ளை படத்தின் விநியோக உரிமை தொடர்பாக ரூ 82.53 இலட்சம் மோசடி செய்துவிட்டதாக சன் பிக்சர் தலைமை நிர்வாகி சக்சேனா மீது இவர் கே.கே. நகர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் பேரில் பொலிஸார் நடவடிக்கை எடுத்து சக்சேனாவை கைது செய்தனர். இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக சன்.டி.வியின் நிர்வாக இயக்குநர் கலாநிதிமாறனுக்கு பொலிஸார் அழைப்பாணை அனுப்பினர்.

கடந்த 13 ஆம் திகதி விசாரணைக்கு வரவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவரது சட்டத்தரணிகள் கே.கே. நகர் பொலிஸ்நிலையத்தில் ஆஜராகி கலாநிதிமாறனால் 26 ஆம் திகதி வரை விசாரணைக்கு ஆஜராக முடியாது என்று கேட்டுக் கொண்டனர். இதனை ஏற்றுக் கொண்ட பொலிஸார் அதுவரை கலாநிதி மாறனுக்கு காலஅவகாசம் அளித்தனர்.

இந்நிலையில் நேற்று கலாநிதிமாறன் கே.கே. நகர் பொலிஸ் நிலையத்தில் ஆஜராவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புகார் கொடுத்தவர்களே அதை வாபஸ் பெற்றுக்கொள்வதாக அறிவித்துவிட்டதை தொடர்ந்து கலாநிதிமாறன் ஆஜராகவில்லை.

புகார் வாபஸ் பெறப்பட்டுவிட்டாலும் கலாநிதிமாறனுக்கு பொலிஸார் மீண்டும் புதிதாக ஒரு அழைப்பாணை அனுப்பியுள்ளனர். செல்வராஜா கொடுத்த புகார்கள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்பதால் கலாநிதி மாறன் ஜுலை 28 ஆம் திகதி காலை 11 மணிக்கு கே.கே நகர் பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ஸ்ரீ-4)




இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலர்கள் அளவிலான பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன் டில்லியில் உள்ள ஐதராபாத் அலுவலகம் முன் பத்திரிகையாளர்களுக்கு கூட்டாக பேட்டியளித்த இரு நாடுகளின் வெளியுறவுத்துறை செயலர்கள்.

# ஓராண்டில் லண்டன் ஒலிம்பிக்ஸ்

லண்டன் ஒலிம்பிக் போட்டி 2012 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. இந்த சர்வதேச விளையாட்டு திருவிழாவுக்கு இன்னும் 364 நாட்கள்தான் உள்ள நிலையில் நிலையில், அதைக் குறிக்கும் விதமாக பல்வேறு நிகழ்வுகள் லண்டன் நகரில் நடைபெறுகின்றன.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகள் திட்டமிட்டபடி சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன என போட்டி ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டுமானப் பணி நடைபெறும் ஒலிம்பிக் அரங்கு



எனினும் இன்னும் பல அரங்குகளில் பெரிய அளவில் பணிகள் முடிபுறாமல் உள்ளன என்றாலும், இதுவரை சாதிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து தாங்கள் பெருமை கொள்வதாக லண்டன் ஒலிம்பிக் குழுவின் தலைவர் செபாஸ்டின் கோ தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் மேட்டுக்குடி மக்களின் ஒரு ஊதாரித்தனம் என்றும், முதலில் எதிர்பார்த்து திட்டமிடப்பட்டதை விட செலவினங்கள் பல மடங்கு உயர்ந்து 15 பில்லியன் பொலர்களை அடைந்துள்ளது என்றும் விமர்சகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

லண்டனிலுள்ள ட்ரஃபால்கர் சதுக்கத்தில் இடம்பெறும் ஒரு தொலைக்காட்சி நிகழ்வில், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் ஜாக் ரக்கர், இந்தப் போட்டிகளில் க்லந்து கொள்ள விளையாட்டு வீரர்களை வருமாறு முறையான ஒரு அழைப்பை விடுப்பார்.

அதேபோல, அலைகள் வடிவில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளத் திறப்பு விழாவை குறிக்கும் வகையில், பிரிட்டனின் வீரர் டாம் டேலி டைவிங் பலகையிலிருந்து நீரினுள் குதிப்பார்.

# இலங்கை டெஸ்ட் தொடர்; அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

(மெல்போர்ன்)

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப் பட்டுள்ளது.

அடுத்த மாதம் இலங்கை வரும் அவுஸ்ரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் ஒரு இருபது–20 போட்டியில் விளையாட உள்ளது. டெஸ்ட் தொடருக்கான அவுஸ்ரேலிய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

மைக்கல் கிளார்க் தலைமையிலான அணியில் மொத்தம் 15 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள் ளனர். சுழற்பந்து வீச்சாளர்களாக நாதன் லியோன், மைக்கல் பீர் இடம் பெற்றுள்ளனர்.

அறிமுக வேகப்பந்து வீச்சாளர்களாக டிரண்ட் கோப்லண்ட், ஜேம்ஸ்



பெட்டின்சன் ஆகியோருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி வருமாறு;

மைக்கல் கிளார்க் (அணித் தலைவர்), ஷேன் வோட்ஷன், பிலிப் ஹியூஸ், ரிக்கி பொன்டிங், மைக்கல் ஹஸி, உஸ்மான் கவாஜா, ஷோன் மார்ஷ், பிராட் ஹடின் (விக்கெட் காப்பாளர்), மிட் செல் ஜோன்சன், ரியான் ஹரிஸ், பீட்டர் சிடில், டிரண்ட் கோப்லண்ட், ஜேம்ஸ்பட்டின்சன், நாதன்லியோன், மைக்கல் பீர்.

இலங்கை சுற்றுப்பயணம் குறித்து கருத்து தெரிவித்த அவுஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கல் கிளாக்,

நாம் டெஸ்ட் கிரிக்கெட்டில் உலக தரவரிசையில் முதலிடத்துக்கு வர முயலும் அணி. ஆகவே இந்தத் தொடர் எமக்கு மிகவும் முக்கியமான நேரம்.

எமது அணி அனுபவம் மற்றும் இளம் திறமையான வீரர்களை கொண்ட கலவையாக உள்ளோம் என்றார்.

# முன்னணி இடங்களைப்பெற்ற யாழ்.பல்கலை கராத்தே வீரர்கள்




இலங்கை பல்கலைக் கழகங்களுக்கிடையிலான 2011ஆம் ஆண்டுக்கான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த 22ஆம் திகதி மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. இதில் 11 பல்கலைக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இப்போட்டியில் யாழ் பல்கலைக் கழக வீரர்களான எஸ்.கஜேந்திரன் 60 கிலோ நிறைக் குழுவுக்கான போட்டியில் முதலாம் இடத்தினையும், எஸ். ராஜ்குமார் மார்க் 50 கிலோ நிறை குழுவுக்கான போட்டியில் 2 ஆம் இடத்தினையும், ஆர்.ஜெயராஜ் 80 கிலோ நிறை குழுவுக்கான போட்டியில் 2ஆம் இடத்தினையும், மற்றும் வி.வி.நவநீதன் 70 கிலோ குழு நிறைப் போட்டியில் 3 ஆம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

எஸ்.கஜேந்திரன்,வி.வி.நவநீதன் ஆகியோர் கடந்த வருட சுற்றுப் போட்டியிலும் 3 ஆம் இடங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டியில் எம்.இளம்பிறையன் முகாமையாளராகவும், பயிற்றுநராக ஏ.ஆர்.சாயிலின்ற குமாரும் கடமையாற்றினர். யாழ். பல்கலைக்கழக கராத்தே அணியின் தலைவராக ஆர். கருணாநிதியும், உபதலைவராக எஸ். கஜேந்திரனும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எல்லாம் தவறாக அமைந்துவிட்டது-தோனி

(லண்டன்)

லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்து முடிந்த முதல் டெஸ்டில் இந்தியா 196 ஓட்டங்களால் மிக மேரசமாகத் தோற்றது.

வரலாற்று சிறப்புமிக்க 2000 ஆவது டெஸ்டில் இந்தியா மிகவும் மோசமாக தோற்றது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. லோர்ட்ஸ் டெஸ்ட் மைதானத்தில் ஏற்பட்ட இந்த மோசமான தோல்வி குறித்து இந்திய அணித்தலைவர் தோனி கூறியதாவது,

லோர்ட்ஸ் டெஸ்ட் போட்டியில் நாங்கள் நினைத்தது எல்லாமே தவறாக நடந்து விட்டது. சகீர்கான் தசைப்பிடிப்பால் பந்து வீச முடியாத நிலை ஏற்பட்டது.இது மிகப்பெரிய இழப்பு. சிறந்த பந்துவீச்சாளரான அவர் இல்லாதது பந்து வீச்சில் பலவீனத்தை காட்டியது. அவர் இல்லாமல் 3 பந்து வீச்சாளர்களை வைத்து பந்து வீசுவது என்பது மிகவும் சிரமமானது.மேலும் சில வீரர்களின் காயம் தோல்விக்கு காரணமாக அமைந்தது.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட டெண்டுல்கர், காயத்தால் பாதிக்கப்பட்ட காம்பீராலும் 100 சதவீத திறமையுடன் ஆட முடியவில்லை என்றாலும் நான் எந்தக் காரணமும் கூறி தப்பிக்க விரும்பவில்லை.

2 ஆவது டெஸ்டில் சகீர்கான் இடம் பெறுவாரா? என்பது பற்றி என்னால் இப்போது எதுவும் கூற இயலாது. இங்கிலாந்து அணியை நாங்கள் சாதாரணமாக எடைபோடவில்லை. எங்களைப் பொறுத்தவரை எல்லா நாடுகளையும் ஒரே மாதிரியாகத்தான் கருதுகிறோம்.

இன்னும் 3 டெஸ்ட் உள்ள தால் இனிவரும் போட்டிகளில் சிறப்பாக விளையாடுவோம் என்றார் தோனி.

# தோனியின் முடிபு தவறு கவாஸ்கர் எடுத்துரைப்பு

(லண்டன்)

இஷாந்த் சர்மாவை பந்து வீச அழைக்காதது தோனியின் தவறான முடிபு என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் 4–ஆவது நாளில் இஷாந்த் சர்மா சிறப்பாகப் பந்து வீசினார். 2–ஆவது இன்னிங்சில் 4 விக்கெட் வீழ்த்திய அவரை மதிய உணவு இடைவேளைக்குப் பின் பந்து வீச தோனி அழைக்கவில்லை.

இதனால் பிரையரும், பிரோட்டும் நிலைத்து நின்று ஆடி அதிக ஓட்டங்களைக் குவித்து விட்டனர். இஷாந்த் பந்து வீசியிருந்தால் அவர்களை ஆட்டமிழக்க செய்திருக்கலாம் என்று கவாஸ்கர் கூறியுள்ளார்.

**இஷாந்த் விளக்கம்**

இதனிடையே தனக்கு ஓய்வு வேண்டும் என்று தோனியிடம் கேட்டதாக இஷாந்த் சர்மா கூறியுள்ளார். 4ஆவது நாளின் தொடக்கத்தில் இருந்து 11 ஓவர்களை வீசிவிட்டேன். எனவே சிறிது ஓய்வு வேண்டும் என்று தோனியிடம் கேட்டேன். அதனால் தான் அவர் என்னை பந்து வீசுமாறு கூற வில்லை என்று இஷாந்த் தெரிவித்துள்ளார்.

# தொடர்ந்து நெருக்கடி தருவோம் -பிரையர்



சிறப்பாகப் பந்து வீசி டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணிக்கு தொடர்ந்தும் நெருக்கடி கொடுப்போம் என இங்கிலாந்து வீரர் மார்ட் பிரையர் தெரிவித்துள்ளார்.

லோர்ட்ஸ் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி சிக்கலான நிலையில் இருந்த போது சதம் அடித்து கைகொடுத்தார் விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரர் மார்ட் பிரையர்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, நான்காவது நாளில் உணவு இடைவேளைக்கு முன் துடுப்பாட களமிறங்குவேன் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இந்திய வீரர்களின் கை ஓங்கியிருந்தது. இஷாந்த் சர்மாவும் மிரட்டிக்கொண்டிருந்தார். ரசிகர்கள் சத்தமும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் 5 விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் என்ற நிலையில் துடுப்பாட்டம் செய்ய களமிறங்கியது மிகவும் நெருக்கடியாக இருந்தது.

முதல் மூன்று நாட்களில் சிறப்பாகவிளையாடியநிலையில் இரண்டாவது இன்னிங்சில் டிக்ளேர் செய்ய விரும்பினோம். இந்நிலையில் சிறப்பாக செயற்பட்டு மீண்டும் போட்டியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது மகிழ்ச்சியாக உள்ளது. உணவு இடைவேளைக்குப் பின் யார் பந்து வீசப்போகின்றனர் என்று நானும் பிரோட்டும் பேசிக் கொண்டிருந்தோம். இந்நிலையில் ரெய்னா பந்துவீச வந்தது ஆச்சரியமாக இருந்தது.

டெஸ்ட் போட்டிகளில் சரியான இடத்தில் பந்துவீசி, இதன்மூலம் எதிரணிக்கு நெருக்கடி கொடுத்துத் தான் போட்டிகளில் வெற்றிபெற்று வந்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்படித்தான்செய்து வருகின்றோம். தொடர்ந்து இந்திய அணிக்கு எதிரான போட்டிகளிலும் இதேமுறையை பின்பற்றுவோம். இவ்வாறு மார்ட் பிரையர் கூறினார்.




பினா சாம்பியன்ஷிப் நீச்சல் போட்டி சீனாவில் நடந்தது. இதில் தங்கம் வென்ற மகிழ்ச்சியில் சீனாவின் ஜகோ ஜிங்.





# அமெரிக்க காங்கிரஸின் தீர்மானம் அ.தி.மு.க. மகிழ்ச்சி வெளியீடு



(சென்னை)

இலங்கைக்கான உதவிகளை தடை செய்வது குறித்த அமெரிக்கக் காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் தீர்மானம் தொடர்பில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளதாக தி ஏசியன் ஏஜ் எனும் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறும் வகையில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பல அமைச்சர்களும் சிரேஷ்ட அங்கத்தவர்களும் அமெரிக்காவின் முன் உதாரணத்தைப் பாராட்டி நேற்று முன்தினம் தமிழ்ப் பத்திரிகைகளில் பெரிய விளம்பரங்களை பிரசுரித்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)


## மரண அறிவித்தல்கள்

### கதிர்காமு கிருஷ்ணபிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)



அல்வாயைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாற்றைப் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்கள் நேற்று (27/07/2011) புதன் கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகத்தின் அன்புக் கணவரும், செவ்வேள் (ஆசிரியர்), வாசுகி (ஆசிரியை, யா/கெருடாவில் இ.த.க. பாடசாலை), தேவகி (ஆசிரியை யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்), நவநீதன் (ஆசிரியர், மு/மாங்குளம் மகாவித்தியாலயம்), ஜானகி (ஆசிரியை, யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் தந்தையாரும், ஜெகதாம்பிகைபாகனின் (தொழினுட்ப உத்தியோகத்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 28/07/2011 இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி.நவநீதன் (மகன்)

(சி-3859)

### சிவப்பிரகாசம் கற்பகம்மா

குருக்கள் மாவடி, மிருசுவில் வடக்கு யாழ்ப்பாணம் எனும் முகவரியை சொந்த இடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் கற்பகம்மா நேற்று (27.07.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னப்பிள்ளையின் அன்பு மகளும் சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் சிவலோகநாதன் (லோகன்-டிப்பர்), யோகேஸ்வரநாதன் (ஈஸ்வரன்), ஞானசொரூபன் (ஞானம்-ஈரோவில்), சரவணபவன் (பவன்-சவுதி), சிகதரன் (பஞ்சவன்-கட்டார்) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தக்வல்:
மகன்: சி.யோகேஸ்வரநாதன் (ரஞ்சித்)
City MedicalS

(5560)


# ஐ.தே.கவின் தோல்விக்கு உட்கட்சிப் பூசலும் காரணம்

## மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியடைந்தமைக்கு அந்தக் கட்சிக்கிடையிலான உட்கட்சிப் பூசலும் ஒரு காரணம் என்று அக் கட்சி எம்.பி. மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு,

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுள் அனேகமானோர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அரசின் தேர்தல் நடவடிக்கையில் மக்கள் நம்பிக்கை இழந்தமையே இதற்குக் காரணம்.

அத்தோடு எமது கட்சிக்குள் காணப்படும் உட் பூசலும் எமது தோல்விக்குக் காரணம். எமது கட்சித் தலைவரை மாத்திரம் குறை கூற முடியாது. கட்சியில் பொறுப்புவாய்ந்தவர்கள் கட்சியின் வெற்றிக்காக என்ன செய்தார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

எமது பிரசாரம் எமது கட்சியின் வெற்றிக்கு வழியமைப்பாக அமைய வேண்டும்., மாறாக அரசின் வெற்றிக்கு வழி அமைப்பதாக இருக்கக் கூடாது. ஆனால் எமது கட்சியிலுள்ள சிலரின் செயற்பாடுகள், பிரசாரங்கள் அரசிற்குச் சாதகமாகவே அமைந்தன என்றார்.

தற்போது பிரிட்டன் சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இந்த விடயம் தொடர்பாக கட்சியின் செயற்குழு கூடி ஆராயும் என்று திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ-8)

## அமெரிக்காவுக்கு விளக்க...

சனல்4வீடியோவில்உள்ளடக்கப்பட்டுள்ள காட்சிகள் போலியானவை என்பதனை அமெரிக்கக் காங்கிரஸ் மற்றும் செனட் சபை உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

காங்கிரஸ் மற்றும் செனட் சபை உறுப்பினர்களுடன் இரு தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

வீடியோவின் போலித்தன்மை குறித்து அமெரிக்க மக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் இலங்கை தொடர்பான நன்மதிப்பை அதிகரிக்கும்நோக்கில் இந்த விசேட தெளிவுபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-8)

## மிருசுவில் படு...

டுத்து வழக்கின் மேலதிக விசாரணை இன்று வியாழக்கிழமை மீண்டும் நடத்தப்படவுள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டு அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்து மலசலகூட குழி யொன்றுக்குள் புதைத்ததாக இலங்கை இராணுவத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஐந்து இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தொடரப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இராணுவவீரர்கள்பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## தி.மு.கவிலிருந்து...

தமிழக சட்டசபைத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி படுதோல்வியடைந்திருந்த நிலையில், அக் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் தலைமையில் கூடிய பொதுக் குழுக் கூட்டத்திலேயே இம் முடிபு எடுக்கப்பட்டது. (எ)

## லலித் கொத்தலா...

பித்துள்ளார்.

இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர்மாதம்17 ஆம்திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. (எ)

## வட மாகாணக்...

ஜீ.ஏ. சந்திரசிறி தொலைபேசி மூலம் கடும் தொனியில் திட்டித் தீர்த்துள் ளார்.

அத்துடன் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரனுக்கு உடனடியாக கட்டாய விடுப்பு வழங்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எனினும் இது தொடர்பில் கல்விப் பணிப்பாளருக்கு உத்தியோகபூர்வ கடிதம் எதுவும் வழங்கப்படவில்லை என ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது. (எ-5)

## அரசாங்கமும்...

இந்நிலையில், பேச்சுவார்த்தைகள் தொடர்பில் உண்மையான கரிசினை கொண்டிருந்தால், இனப் பிரச்சினைத் தீர்வுக்காக தெளிவான திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

இரண்டு மாகாணங்களுக்கும் போதியளவு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரப்புரைகளை முன்னெடுத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். (எ)

## யாழ். நகருக்கு அண்மை...

ரும் போத்தல்கள் மற்றும் கல்லு களால் மாறிமாறி தாக்கத் தொடங் கினர். இதனையடுத்து அப் பகுதி பெரும் களேபரப் பூமியாகக் காட்சி யளித்தது.

அப் பகுதியூடான போக்குவரத்துக்கள் அனைத்தும் தடைப்பட்டன. வீதி போத்தல் சிதறல்களால் குவிந்து காணப்பட்டன.

இச் சம்பவம் தொடர்பாக கேள்வியுற்ற இராணுவத்தினர் விரைந்து சென்று வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு மோதலை கட்டுப்படுத்தியதுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினர், சம்பவத்துடன் தொடர்புடைய 10 பேரை கைது செய்ததுடன் மோதல் குறித்த விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்று இரவு முழுவதும் அப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (எ-8)

## ‘பாதை’ நடை பவனி...

ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக் கப்பட்ட நடை பவனியில் கிரிக்கெட்பிரபலங்களும்பங்குபற்றின.

இதேவேளை 27 நாட்களாக இந்த நடைப் பவனியில் பிரபல குத்துச்சண்டை வீரர் மஞ்சு வன்னியாராட்சி முற்றுமுழுதாக பங்கு பற்றினார்.

மேலும் இந்த நடைப்பயணத்தில் பங்குபற்றி யவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் மகேல ஜெயவர்த்தன, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை தெல்லிப்பழைப் பிரதேசத்தில் புற்று நோய்க் கதிர் வீச்சு சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-6)


### பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சை

வழிகாட்டல் கருத்தரங்கு

**அரசறிவியல்**

(புதிய, பழைய பாடத்திட்டம்)

**எஸ். கோகுலன்**

காலம்:- 01.08.2011 -திங்கள் (9-1 மணி)
02.08.2011 - செவ்வாய் (12-03 மணி)

- பரீட்சைக்குரிய கையேடுகள் வழங்கப்படும்.
- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம். (கட்டணம்- 200/=)
- உங்கள் அனுமதியினை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-3855)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.